இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 226 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 14 – புதன்கிழமை 27 மார்ச் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 226 : Thiruvalluvar Year - 2055 - Panguni 14 - Wednesday 27 March 2024 - Dak 12 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டுக்கான பேரிடர் நிவாரண நிதியைத் தர மறுக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

## நெல்லை மாவட்டம், நாங்குநேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2024) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளர் விஜய் வசந்த் அவர்களையும், திருநெல்வேலியில் போட்டியிடும் வழக்கறிஞர் ராபர்ட் புரூஸ் அவர்களையும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தாரகை கத்பெர்ட் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மனோ தங்கராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப், ரூபி மனோகரன், பிரின்ஸ், ராஜேஷ் குமார், மாவட்ட கழகச் செயலாளர்கள் ஆவுடையப்பன், மைதீன்கான், மகேஷ், ஜெயபாலன் மற்றும் ‘இந்தியா’ கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

நாங்குநேரி, மார்ச் 27–

**நெல்லை மாவட்டம், நாங்குநேரியில் நேற்று முன்தினம் (25.3.2024) மாலை நடைபெற்ற தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, திருநெல்வேலி மக்களவைத் தொகுதி – ராபர்ட் புரூஸ், கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி – விஜய் வசந்த், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் – தாரகை கத்பெர்ட் ஆகிய இந்தியா கூட்டணி வெற்றி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு கேட்டு எழுச்சியுரை ஆற்றுகையில் “தமிழ்நாட்டுக்கான பேரிடர் நிவாரண நிதியைத் தர மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளோம்”! எனக் குறிப்பிட்டார்.**

முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :–

கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளராக இங்கு இருக்கும் தம்பி விஜய் வசந்த் பற்றி சொல்ல வேண்டும் என்றால், எனக்கு வரும் ரிப்போர்ட்களில், ”கன்னியாகுமரி எம்.பி. – விஜய் மிகவும் நன்றாகச் செயல்படுகிறார். தொகுதி மக்களுக்காகக் கடுமையாக உழைக்கிறார் – என்று சொல்கிறார்கள்!

### வாரி வழங்கும் வள்ளல்குணம் கொண்ட வசந்தகுமாரின் புதல்வர்!

அப்போது என் மனதில் என்ன தோன்றுமென்றால், தம்பி விஜய் வசந்துக்கு உழைக்கச் சொல்லித் தர வேண்டுமா? யாருடைய மகன் உழைப்பால் உயர்ந்து, இங்கிருக்கும் நாங்குநேரி மக்களுக்காகச் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, இதே கன்னியாகுமரி மக்களால் தங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தன்னுடைய வாரி வழங்கும் குணத்தால் இன்றைக்கும் நம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் வசந்தகுமார் அவர்களின் மகன் அல்லவா! உங்களுக்காக உழைக்க அவர் கன்னியாகுமரியில் மீண்டும் களம் காண்கிறார். கடந்த தேர்தலைவிட இன்னும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

### திருச்சபை மூலம் சமூகத் தொண்டாற்றும் ராபர்ட் புரூஸ்!

திருநெல்வேலியில் போட்டியிடும் வழக்கறிஞர் ராபர்ட் புரூஸ் மாவட்டக் காங்கிரஸ் தலைவராக மட்டுமல்ல, பக்கத்து மாநிலங்களுக்கும் சென்று காங்கிரஸ் கட்சியை வளர்த்த பெருமைக்குரியவர். தென்னிந்தியத் திருச்சபை மூலமாகச் சமூகத் தொண்டும் ஆற்றி வருபவர். இவர்களுக்கு நீங்கள் அளிக்கும் வாக்கு என்பது உங்கள் தொகுதிக்கான எம்.பி. யைத் தேர்வு செய்வதற்காக மட்டுமல்ல.

நீங்கள் அளிக்கும் வாக்குதான் இந்தியாவின் அடுத்த பிரதமராக ஒரு ஜனநாயகவாதி வருவதை உறுதிசெய்யப் போகிறது! உங்கள் வாக்குதான் மனிதநேயமிக்க ஒருவரைப் பிரதமர் பொறுப்பில் உட்கார வைக்கப் போகிறது!

தமிழ்நாட்டை மதிக்கும், தமிழர்களை வெறுக்காத ஒருவர் பிரதமர் ஆக வேண்டும் என்றால், அது உங்கள் ‘கை’யில்தான் இருக்கிறது. அதற்கு, பிரதமர் நரேந்திர மோடியைத் தோற்கடித்தாக வேண்டும். மீண்டும் மோடி ஆட்சிக்கு வந்தால், அமைதியான இந்தியா – அமளியான இந்தியாவாக மாறிவிடும்.

அதற்கு சமீபத்திய உதாரணம், மணிப்பூர் மாநிலத்தில் நடந்த கலவரம். அந்த மாநில மக்கள், என்னென்ன கஷ்டப்பட்டார்கள்! சொந்த நாட்டிலேயே அகதிகள் மாதிரி வாழ்ந்தார்கள்! நம்முடைய எம்.பி.–க்கள் குழு சென்று பார்த்த போது, தாய்மார்கள் கதறினார்களே அதையெல்லாம் மறக்க முடியுமா?

> **தமிழ்நாட்டுக்கு என்று ஒரு சிறப்புத் திட்டத்தின் பெயரைக்கூடச் சொல்ல முடியாமல், பத்தாண்டுகளாக எதைச் சாதித்தீர்கள்? ஆனால், எங்கள் வரிப் பணத்தில் ஒரு ரூபாய் கொடுத்தால் 29 பைசாதான் திரும்பி வருகிறது! அதைக் கேட்கிறோமே, அதற்காவது பதில் வைத்திருக்கிறீர்களா? இல்லை அதற்கும் வாயாலே வடை சுடுவீர்களா?**

அதனால்தான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன், பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் – ஒருதாய் மக்களாக ஒற்றுமையாக வாழும் இந்தியாவை, வெறுப்பு விதைகளைத் தூவி நாசம் செய்துவிடுவார்கள்! அதை மனதில் வைத்து, அமைதியான – வளர்ச்சியை நோக்கிய இந்தியாவுக்காக நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்கத்தான் நான் வந்திருக்கிறேன்.

### இரண்டு இயற்கைப் பேரிடர்கள்! ஒரு பைசா கூட தராத பிரதமர்!

சில நாட்களுக்கு முன்னால், குமரிக்கும் – திருநெல்வேலிக்கும் பிரதமர் நரேந்திர மோடி வந்திருந்தார். தேர்தல் வந்துவிட்டது என்று இப்போது அடிக்கடி வரும் பிரதமர் மோடி அவர்களே

வெள்ளம் வந்தபோது எங்கு இருந்தீர்கள் இரண்டு இயற்கைப் பேரிடர்! அடுத்தடுத்து தமிழ்நாட்டின் வட மாவட்டங்களையும் – தென் மாவட்டங்களையும் தாக்கியது. பிரதமர் மோடி அவர்களே ஒரு பைசாவாவது கொடுத்தீர்களா? இல்லையே! நிதிதான் தரவில்லை ஓட்டு கேட்டு வந்தபோது மக்களுக்கு ஆறுதல் வார்த்தையாவது கூறினீர்களா? ஒன்றிய அரசிடமிருந்து நிதி வரவில்லை என்றாலும், மக்களுக்குச் செய்ய வேண்டியதை – தர வேண்டியதை – உதவ வேண்டியதை – உடனடியாக கொடுக்க வேண்டும் என்று நாங்கள் செயல்பட்டோம்.

### அமைச்சர்கள் குழு ஓடோடி வந்து ஆறுதல் கூறி – நிவாரணம் வழங்கியது!

அமைச்சர் பெருமக்கள் – கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்., தங்கம் தென்னரசு, ராஜகண்ணப்பன்,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### தங்கள் குடும்பங்களில் ஒருவனாக – தூத்துக்குடி

# மீனவர்களும் - வணிகர்களும் என்னை அரவணைத்துக் கொண்டார்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**தூத்துக்குடி, மார்ச் 27 -**

**தூத்துக்குடியில் மீனவர்களும் - வணிகர்களும் என்னை தங்கள் குடும்பங்களில் ஒருவனாக அரவணைத்துக் கொண்டதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு ஆதரவாக, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.03.2024) தூத்துக்குடி காமராஜர் காய்கறி சந்தையில் சிறு வணிகர்கள், லயன்ஸ் டவுன் பகுதி மீனவ மக்கள் எனப் பல தரப்பினரிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது தொழிலாளர்கள், பெண்கள், பொதுமக்கள், சிறுவர்கள் என அனைத்துத் தரப்பினரும் அவருடன் ஆர்வத்துடன் செல்பி எடுத்துக் கொண்டனர்.

மேலும், வாக்கு சேகரிப்பின் இடையே லயன்ஸ் டவுன் பகுதி மக்களின் அழைப்பை ஏற்று அவர்கள் இல்லத்தில் தேநீர் அருந்தி, அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

இதுகுறித்து சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது:–

**“தூத்துக்குடியில் மீனவ நண்பர்களிடமும் வணிகத் தோழர்களிடமும் வாக்கு சேகரித்தபோது....**

**தங்கள் குடும்பங்களில் ஒருவன் என என்னை அவர்கள் அரவணைத்துக் கொண்டார்கள்!”**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் இன்றைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| **27.03.2024 (புதன்கிழமை)** | - | **தென்காசி, விருதுநகர்.** |

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 27-03-2024

# பத்திரங்களுக்குப் பின்னால்...!

தேர்தல் பத்திரங்களைத் தோண்டத் தோண்ட புது புது பூதம் கிளம்பிக் கொண்டே இருக்கிறது!

காங்கிரஸ் கட்சியும், ஆம் ஆத்மி கட்சியும் இது தொடர்பாக வைத்துள்ள பகிரங்க குற்றச்சாட்டுகளுக்கு இதுவரை பா.ஜ.க. தலைமையோ உள்துறை அமைச்சர் அமித்ஷாவோ பதில் சொல்லவில்லை.

**“மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்ற பா.ஜ.க. தலைவர் நட்டாவை அமலாக்கத்துறை கைது செய்ய வேண்டும்”** என்று கோரிக்கை வைத்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

**“மதுபான முறைகேடு புகாரில் கைது செய்யப்பட்ட அரவிந்தோ ஃபார்மா இயக்குனரிடம் பா.ஜ.க. ரூ.55 கோடி தேர்தல் நன்கொடை பத்திரத்தை பெற்றுள்ளது. ரூ.55 கோடிக்கு பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரம் வழங்கிய பின்னர் அரவிந்தோ ஃபார்மா இயக்குனர் ஜாமீனில் விடுவிக்கப் பட்டிருக்கிறார் . மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்றது குறித்து பிரதமர் மோடியும், பா.ஜ.க. தலைவர் நட்டாவும் விளக்கம் அளிக்க வேண்டும். இது குறித்து அமலாக்கத்துறையும் விளக்கம் அளிக்க வேண்டும்”** என்று - ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை வைத்துள்ளது.

மதுபானக் கொள்கை வழக்கு தொடர்பாக டெல்லி முதலமைச்சர் கைது செய்யப்பட்டுள்ளார். துணை முதலமைச்சர் 13 மாதமாக சிறையில் இருக்கிறார். ஆனால் அது தொடர்பாக குற்றம் சாட்டப்படும் நிறுவனத்திடம் இருந்து பா.ஜ.க. நன்கொடைப் பெற்றுள்ளதை ஆம் ஆத்மி கட்சி அம்பலப்படுத்தி உள்ளது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் ஒன்றிய முன்னாள் அமைச்சருமான ஜெய்ராம் ரமேஷ் வைத்துள்ள குற்றச்சாட்டுகள் இதை விட பகிரங்கமானவை.

“கருப்பு பணத்தை ஒழிப்பேன் என்று உறுதி அளித்த பிரதமர் மோடி, ஊழலைச் சட்டப் பூர்வமாக்கி விட்டு இப்போது அதனை மறைக்க முயற்சி செய்கிறார். இந்த அப்பட்டமான ஊழல், நான்கு வழிமுறைகளில் நடந்துள்ளன.

* முதலாவதாக, ‘நன்கொடை கொடு, வாய்ப்பைப் பெறு’. அதாவது, ப்ரீப் பெய்டு லஞ்சம்.

* இரண்டாவதாக, ‘ஒப்பந்தம் பெறு, லஞ்சம் கொடு’. அதாவது போஸ்ட் பெய்டு லஞ்சம்.

* மூன்றாவது வழிமுறை என்பது ‘ஹாஃப்தா வசூல்’. அதாவது ரெய்டுக்கு பின்னர் லஞ்சம். முதலில் நிறுவனங்களுக்கு சோதனை செய்ய அமலாக்கத் துறை, சி.பி.ஐ. அனுப்பப்படும், அதிலிருந்து தப்பிக்க அந்த நிறுவனம் தேர்தல் பத்திரங்கள் வழங்கும்.

* நான்காவது, ஷெல் நிறுவனங்களின் பயன்பாடு.

தேர்தல் பத்திரங்கள் வழியாக நன்கொடை வழங்கியதன் மூலம் 38 கார்ப்பரேட் நிறுவனங்கள், 179 முக்கியமான ஒப்பந்தங்கள் மற்றும் திட்டங்களை ஒன்றிய மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகளிடம் இருந்து பெற்றுள்ளது பகுப்பாய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலமாக ரூ.2,004 கோடி நன்கொடை வழங்கியதன் மூலமாக மொத்தம் ரூ.3.8 லட்சம் கோடி மதிப்புள்ள திட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளன.

41 கார்ப்பரேட் நிறுவனங்கள் மொத்தமாக 56 முறை, அமலாக்கத் துறை, சி.பி.ஐ., வருமான வரித் துறை சோதனைகளுக்கு ஆளாகியுள்ளன. இந்நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு ரூ.2,592 கோடி கொடுத்துள்ளன. இதில் ரூ.1,853 கோடி விசாரணை அமைப்புகளின் சோதனைக்குப் பின்னர் கொடுக்கப்பட்டுள்ளது” என்று ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டி இருக்கிறார்.

**“இந்த மக்களவைத் தேர்தலில் இண்டியா கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால், தேர்தல் பத்திர ஊழலை விசாரிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்படும். அதானி விவகாரத்தை விசாரிக்க கூட்டு நாடாளுமன்றக் குழு அமைக்கப்படும். அதேபோல், பி.எம். கேர்ஸ் ஃபண்ட் குறித்து சிறப்புக் குழு மூலம் விசாரிக்கப்படும்”** என்றார் அவர். இவை அனைத்தும் பா.ஜ.க.வின் ஊழல் பாதைகள் ஆகும்.

வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லக் கூடிய பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளர்கள் வாய்மூடிக் கிடக்கிறார்கள். பதில் அளிக்க முடியவில்லை.

கடந்த சனவரி மாதமே இது தொடர்பான ரகசியங்கள் ஆங்கிலச் செய்தி இணையதளங்கள் மூலமாகக் கசிந்தன. 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரையிலான தேர்தல் ஆணைய ஆவணங்கள், வழக்கு விவரங்கள், நிதி அறிக்கைகளை ஆய்வு செய்து இதனை வெளிப்படுத்தியது.

**“கடந்த 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரை பா.ஜ.க.வுக்கு நிதியளித்த நிறுவனங்கள் பட்டியலை பரிசீலித்ததில் அதில் 30 நிறுவனங்கள் மீது அதே காலகட்டத்தில் ஒன்றிய அரசின் ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. ரெய்டு நடத்தியுள்ளது. இந்த 30 நிறுவனங்களும் மொத்தம் ரூ.335 கோடியை பா.ஜ.க.வுக்கு தேர்தல் நிதியாக தந்துள்ளன. இதில் 23 நிறுவனங்கள் ரெய்டு நடத்தப்படும் வரை பா.ஜ.க.வுக்கு ஒரு பைசா கூட தேர்தல் நிதி தந்தது இல்லை. ரெய்டு நடத்தப்பட்டதும் அந்த 23 நிறுவனங்களும் பா.ஜ.க.வுக்கு நிதி தர ஆரம்பித்துள்ளன. மொத்தம் ரூ.187.58 கோடி நிதியை அந்த நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு வாரி வழங்கி உள்ளன. 4 கம்பெனிகளில் ரெய்டு நடத்தப்பட்ட 4 மாதத்துக்குள் பா.ஜ.க.வுக்கு நிதி தந்துள்ளன. பா.ஜ.க.வுக்கு ஏற்கனவே குறைவாக நிதி தந்த 6 நிறுவனங்கள் மீது ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களிலேயே அந்த நிறுவனங்கள் பல மடங்கு அதிக நிதியை பா.ஜ.க.வுக்கு கொடுத்துள்ளன. தொடர்ந்து பல ஆண்டுகளாக பா.ஜ.க.வுக்கு நிதி தந்த நிறுவனங்கள் திடீரென நிதி தருவதை நிறுத்திவிட்டால் கூட ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. இப்படி 6 நிறுவனங்களை ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர். ரெய்டு நடந்து கொண்டிருக்கும் போதே சில நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு நிதி தந்ததும் தெரியவந்துள்ளது. நன்கொடை தந்த 3 நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசிடம் இருந்து லைசென்ஸ் உள்ளிட்ட சலுகைகள் கிடைத்துள்ளது”** என்று அவை வெளியிட்டன. இவையும் இது வரை பா.ஜ.க.வால் மறுக்கப்படவில்லை.

இதைப்பற்றி எல்லாம் கேள்வி கேட்டால், ‘இவை அனைத்தும் கற்பனை’ என்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்திருக்கிறது தேர்தல் பத்திரங்கள். கிழிக்கப்பட்ட பத்திரங்களுக்கு பின்னால் பா.ஜ.க.வின் ஊழல் முகம் கோரமாகத் தெரிகிறது.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.3.2024) அவரது இல்லத்தில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சசிகாந்த் செந்தில், செல்வி எஸ்.ஜோதிமணி, எம்.கே.விஷ்ணு பிரசாத் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, முன்னாள் மாநிலத் தலைவர் கே.வி.தங்கபாலு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# விழுப்புரம் மக்களவைத் தொகுதியில் ரவிக்குமார் மாபெரும் வெற்றி பெறுவார்!

## அமைச்சர் முனைவர் பொன்முடி பேட்டி!

விழுப்புரம், மார்ச் 27 -

விழுப்புரம் மக்களவைத் தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள வேட்பு மனுத் தாக்கல் அலுவலகத்தில் திங்கள்கிழமை ‘இந்தியா’ கூட்டணியின் சார்பாக விழுப்புரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் ரவிக்குமார் மாவட்ட தேர்தல் அலுவ லர் பழனியிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

அப்போது அமைச்சர் பொன்முடி, சி.பி.எம். கட்சியின் முன்னாள் எம்.எல்.ஏ., ஆர்.ராமமூர்த்தி, வி.சி.க. பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் எம்.எல்.ஏ., காங்கிரஸ் குலாம் மொய்தின் ஆகியோர் உடன் இருந்தனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் க.பொன்முடி, ‘இந்தியா’ கூட்டணிக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வி.சி.க. வேட்பாளர் ரவிக்குமாரை பானை சின்னத்தில் ஆதரித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பிரச்சாரம் செய்ய உள்ளனர்.

இதனால் விழுப்புரம் மக்களவைத் தொகுதியில் மிகப்பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் வேட்பாளர் ரவிக்குமார் வெற்றி பெறுவது உறுதி என்று அவர் கூறினார்.

### வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து – இன்று

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அரக்கோணம் தொகுதியில் பிரச்சாரம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, மார்ச் 27 -

அரக்கோணம் நாடாளுமன்றவெற்றி வேட்பாளார் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இதுகுறித்து மாவட்ட தி.மு.க. செயலாளர், கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் இராணிபேட்டை ஆர். காந்தி அறிக்கை வருமாறு:

அரக்கோணம் நாடாளுமன்ற மதச்சார்பற்ற ‘இந்தியா’ கூட்டணியின் வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து, கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், வருங்கால தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (27.03.2024 புதன் கிழமை) கீழ்க்கண்ட இடங்களில் பரப்புரை மேற்கொள்ள உள்ளார்.

இன்று காலை 10.00 ஆற்காடு பேருந்து



நிலையம்

காலை 10.45 இராணி பேட்டை, முத்துக்கடை பேருந்து நிலையம்

காலை 11.30 வாலாஜா பேருந்து நிலையம்

மதியம் 12.30 சோளிங்கர் பேருந்து நிலையம்

மாலை 5.00 திருத்தனி, கமலா திரையரங்கம் அருகில்

மாலை 6.00 அரக்கோணம் பழைய பேருந்து நிலையம் அருகில் என பிரச்சாரம் செய்கிறார்.

மேற்கண்ட இடங்களில் தேர்தல் பரப்புரை மேற்கொள்ளும்போது அந்தந்த சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு, BLA2, BLC, மற்றும் கிளைக் கழக வார்டு, ஊராட்சி, உட்கிளை நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்காள பெருமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை, வெற்றிகரமாக நடைபெற்றிட கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் - அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி கேட்டுக்கொண்டார்.

# திருவொற்றியூரில் பாக முகவர்கள் கூட்டம்!

திருவொற்றியூர், மார்ச் 27 –

திராவிட நாயகர், கழகத் தலைவர் ஆணைக்கிணங்க 2024 நாடளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்த பாக முகவர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுரையின் பேரில், திருவொற்றியூர் மேற்கு பகுதி 4, 6 ஆகிய வட்டங்களில் 22.3.2024 அன்று நடைபெற்றது.

பாகமுகவர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் நிர்வாகிகள் கூட்டம் பகுதி கழக அறிவுறுத்தலின்படி வட்டக் கழகச் செயலாளர்கள் கே.பவுல், கி.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் அந்தந்த வட்டங்களில் நடைபெற்றது.

மாநில ஆதிதிராவிட துணைச் செயலாளர் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மயிலை சி.தசரதன், திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்கள்.

4–வது வட்ட கூட்டம் ராமகிருஷ்ணா நகர் 4–வது பிரதான சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் மாலை 5.00 மணியளவில் வட்டக் கழக செயலாளர் கே. பவுல் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பாக ஒருங்கிணைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் ந. ராம்குமார், ஜி.தினேஷ் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், ( BLA & 2 ) பாக முகவர்கள் பங்கேற்றனர்.

6–வது வட்டத்தில் 7–வது தெரு சரஸ்வதி நகர் சங்கத்தில் மாலை 6.30 மணியளவில் வட்ட கழக செயலாளர் கி.கண்ணன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பாக ஒருங்கிணைப்பாளர்கள், தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.மோகனசுந்தரம், மாவட்ட பிரதிநிதி எஸ்.கணேஷ், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் (BLA &2) பாக முகவர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் மீண்டும் இரண்டாம் முறையாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் மருத்துவர் கலாநிதி வீராசாமி அவர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற ஆற்ற பணிகள் குறித்தும், பாக முகவர்களின் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

### நாடாளுமன்றத் தேர்தல் 2024: இந்தியாக் கூட்டணிக்கு

# தமிழக உழவர் உழைப்பாளர் கட்சி - தமிழ்நாடு விவசாய சங்கம் ஆதரவு!

## மாநில தலைவர் எம்.வேல்முருகன் - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியைச் சந்தித்து தெரிவித்தார்!

சென்னை, மார்ச் 27-

நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல் ‘தமிழக உழவர் உழைப்பாளர் கட்சி மற்றும் தமிழ்நாடு விவசாய சங்கம்’ மாநில தலைவர் எம்.வேல்முருகன் மற்றும் நிர்வாகிகள் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர். இது பற்றிய விவரம் வருமாறு:-

‘தமிழக உழவர் உழைப்பாளர் கட்சி மற்றும் தமிழ்நாடு விவசாய சங்கம்’ தலைவர் எம்.வேல்முருகன் மற்றும் நிர்வாகிகள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவதோடு, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதாகவும் உறுதி அளித்தனர்.



தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதியிடம் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மேயர் ஜெகன் பெரியசாமி, இந்தியத் தேசிய காங்கிரஸ் துணைத் தலைவர் ஏ.பி.சி.சண்முகம் ஆகியோர் உடன் இருந்தனர். முன்னதாக தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தார்.

# பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் – வெறுப்பு விதைகளைத் தூவி நாட்டை நாசம் செய்து விடுவார்கள்!

## நாங்குநேரியில் கழகத் தலைவர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2024) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளர் விஜய் வசந்த் அவர்களையும், திருநெல்வேலியில் போட்டியிடும் வழக்கறிஞர் ராபர்ட் புரூஸ் அவர்களையும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தாரகை கத்பெர்ட் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மனோ தங்கராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப், ரூபி மனோகரன், பிரின்ஸ், ராஜேஷ் குமார், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆவுடையப்பன், மைதீன்கான், மகேஷ், ஜெயபாலன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

உதயநிதி ஸ்டாலின், கீதா ஜீவன், அனிதா ராதா கிருஷ்ணன், மூர்த்தி, மனோ தங்கராஜ் என்று, எல்லோரையும் இங்கே அனுப்பி வைத்தோம்.

**உழவர்களின் வாழ்வாதாரம் மீட்க ஓய்விலாது உழைத்தோம்!**

பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிகிச்சைகள் அளிக்க, தொற்று நோய் எதுவும் வராமல் இருக்க, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் 2,500–க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்த உத்தர விட்டேன்.

அதேபோல, உழவர்களின் வாழ்வாதா ரத்தை மீட்டெடுக்க வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்தைக் களத்திற்கு அனுப்பினேன்.

தமிழ்நாட்டின் மொத்த அமைச்சர்களும் இங்கு வந்து தங்கி நிவாரணப் பணிகளில் ஈடு பட்டார்கள். மக்களோடு மக்களாக கூடவே இருந்து, ஆறுதல் கூறி, என்ன தேவைகள் என்று கூடவே இருந்து, வேண்டியதைச் செய்து கொடுத்தார்கள்.

நானும், டிசம்பர் மாதம் 21–ஆம் தேதி தூத் துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் வெள் ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதி களைப் பார்வையிட்டு, நிவாரண உதவிகளை வழங்கினேன்.

கடந்த பிப்ரவரி 25 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 38 ஆயிரத்து 614 பேருக்கு, 118 கோடியே 87 லட்சம் ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய கைதான், இந் தக் கை.

**இரண்டு இயற்கைப் பேரிடர் இழப்பீடு! 37 ஆயிரம் கோடி கேட்டோம்!**

ஒன்றிய அரசிடம் என்ன கேட்டோம்? மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள் அவர் களின் வாழ்வாதாரங்களை மீட்டெடுக்க வேண் டும் என்று, இரண்டு இயற்கைப் பேரிடர்களுக் கான இழப்பீடு – மறு சீரமைப்பு – நிவாரணத் தொகையாக 37 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் கேட்டோம். தொடர்ந்து கேட்கிறோம் தந்தார்களா? இல்லை.

நாம் உரிமையோடு கேட்பதைத் தர மறுக் கும் ஒன்றிய அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றத் தில் வழக்கு தாக்கல் செய்யப் போகிறோம் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக அறிவிக் கிறேன்.

சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் சட்டத்துக்குக் கையெழுத்து போடச் சொல்லுங் கள் என்று நீதிமன்றம் சென்றோம்.

**ஓரவஞ்சனை மட்டுமல்ல; மக்களை கிண்டல், கேலி செய்கிறார்கள்!**

பொன்முடி அவர்களை மீண்டும் அமைச்ச ராக்க வலியுறுத்த நீதிமன்றம் சென்று வென் றோம்.

இப்போது நிதி கேட்டும் நீதிமன்றம்தான் செல்ல வேண்டுமென்றால், பா.ஜ.க. எத்த

## ஒன்றிய பா.ஜ.க. அரசே! மக்களாட்சியில் மக்களையே அவமதித்தபோதே, உங்களின் தோல்வி உறுதியாகிவிட்டது!

கைய, ஓரவஞ்சனையான அரசாக நடந்து கொண்டிருக்கிறது?

ஓரவஞ்சனை மட்டுமா செய்கிறார்கள்? நிதி யையும் தராமல் நம்முடைய மக்களை ஏளனம் வேறு, செய்கிறார்கள். கேலி, கிண்டல் செய்கி றார்கள்.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர் கள், நிவாரண நிதியும் தரமாட்டார்களாம். மாநில அரசே மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்கினால் அதையும் 'பிச்சை' என்று ஏளனம் செய்வார்களாம்.

**மக்கள் துயருறும் போது உதவுவதே அரசின் கடமை!**

அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, அரசு செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாயும் மக்களின் பணம். அவர்கள் கஷ்டப்ப டும்போது அவர்களுக்கு உதவுவதுதான் அரசின் கடமை. அதைக் கேட்பது மக்களின் உரிமை. மக்களாட்சியில் மக்களையே அவமதித்த போதே உங்களின் தோல்வி உறுதியாகிவிட்டது!

அம்மையார் அவர்களே ஒரே ஒருமுறையா வது மக்களை வந்து சந்தித்துப் பாருங்கள் அப் போது தெரியும் மக்கள் உங்களுக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்கள் என்று! அதற்குப் பிறகு, பிச்சை என்ற வார்த்தையே உங்கள் நினைவிற்கு வராது!

**தமிழர்கள் மீது ஏன் இத்தனை கோபம்! வெறுப்பு! வன்மம்!**

ஆட்சி இருக்கிறது பதவி இருக்கிறது என்று பா.ஜ.க.வினர் என்ன வேண்டுமானாலும் ஆண வமாகப் பேசலாமா? அதிலும் ஒரு ஒன்றிய அமைச்சர் தமிழர்களை பிச்சைக்காரர்கள் என்று கூறினால், இன்னொரு ஒன்றிய அமைச் சர் தமிழர்களை தீவிரவாதிகள் – பயங்கரவாதி கள் எனக் குற்றம் சாட்டுகிறார்.

தமிழர்கள் மேல் ஏன் இத்தனை கோபம்! வெறுப்பு! வன்மம்! மக்களிடையே வெறுப்பை விதைத்து, பிளவுகளை உண்டாக்கி, அதில் குளிர்காய நினைக்கும் பா.ஜ.க.வின் எண்ணங் கள் ஒருபோதும் பலிக்காது!

> **மக்களிடையே வெறுப்பை விதைத்து, பிளவுகளை உண்டாக்கி, அதில் குளிர் காய நினைக்கும் பா.ஜ.க.வின் எண்ணங்கள் ஒருபோதும் பலிக்காது!**

மேம்பட்ட சிந்தனைகள் உள்ள நாம், நம்மு டைய சகோதர – சகோதரிகளுக்கு வழிகாட்ட வேண்டும்! பா.ஜ.க.விற்கு வாக்களிப்பது அவ மானம் என்று எடுத்துச் சொல்ல வேண்டும். பா.ஜ.க.விற்கு வாக்களிப்பது எதிர்கால சந்ததிக் குச் செய்யும் துரோகம் என்று புரிய வைக்க வேண்டும்!

**பிரதமர் அவர்களே! தமிழ்நாட்டுக்கு நீங்கள் கொண்டு வந்த சிறப்புத் திட்டங்கள் என்ன?**

தேர்தலுக்காக மட்டும் தமிழ்நாட்டுக்கு வரும் பிரதமரிடம் நானும் நீண்ட நாட்களாக ஒன்றைக் கேட்கிறேன். அதைத் திரும்பவும் கேட்கிறேன் பிரதமர் மோடி அவர்களே தமிழ்நாட்டுக்காக உங் கள் தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த சிறப்புத் திட்டங்கள் என்ன? என் கேள்விக்கு என்ன பதில்? பதில் கூறுங்கள் மோடி அவர்களே

தமிழ்நாட்டுக்கு என்று ஒரு சிறப்புத் திட்டத்தின் பெயரைக்கூடச் சொல்ல முடியாமல், பத்தாண்டுகளாக எதைச் சாதித்தீர்கள்? ஆனால், எங்கள் வரிப் பணத்தில் ஒரு ரூபாய் கொடுத்தால் 29 பைசாதான் திரும்பி வருகிறது! அதைக் கேட்கிறோமே, அதற்காவது பதில் வைத்திருக்கிறீர்களா? இல்லை அதற்கும் வாயாலே வடை சுடுவீர்களா?

**ஒன்றியத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு நாங்கள் கொண்டு வந்த திட்டங்கள்!**

பிரதமர் மோடி அவர்களே திராவிட முன் னேற்றக் கழகம் ஒன்றியத்தில் ஆட்சி செய்த கட்சி அல்ல! ஆனால், பல ஆட்சிகளில் பங் கேற்ற கட்சி! நாங்களே தமிழ்நாட்டுக்கு எவ்வ ளவு சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வந்தோம் தெரியுமா? பட்டியல் போடட்டுமா?

● இந்திய அரசு செலவு செய்த திட்டச் செல வில் 11 விழுக்காட்டை தமிழ்நாட்டு வளர்ச்சிக்குக் கொண்டு வந்தோம்.

● மிக முக்கியமான 69 திட்டங்களை நிறை வேற்றிக் காட்டினோம்.

● ஈராயிரம் ஆண்டு இலக்கியப் பெருமை கொண்ட தமிழ்மொழியைச் செம்மொழியாக் கும் பெருங்கனவு 100 ஆண்டுகளாக நம் தமி ழர்களுக்கு இருந்தது. அந்தக் கனவை நனவாக் கினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

● செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவ னத்தை சென்னையில் அமைத்தோம்.

● தமிழ்நாடு முழுவதும் உள்ள நெடுஞ்சா லைகள் நம் கூட்டணி ஆட்சியில்தான், 56 ஆயி ரத்து 664 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் செய்தோம்!

● ஒரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம்!

● 1,553 கோடி ரூபாய் செலவில் சேலம் உருட்டாலை சர்வதேச அளவுக்கு உயர்வு! புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம்!

● தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்! சேலத்தில் புதிய இரயில்வே கோட்டம்!

● 1,650 கோடி ரூபாய் செலவில் சென்னை துறைமுகம் – மதுரவாயல் பறக்கும் சாலை!

● 2,427 கோடி ரூபாய் செலவில் சேதுசமுத் திரத் திட்டம்! நெசவுத் தொழிலுக்கு இருந்த சென்வாட் வரி நீக்கம்!

● 908 கோடி ரூபாய் செலவில், நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்!

● அடக்குமுறை பொடா சட்டம் ரத்து!

● தமிழ்நாட்டில் இருக்கும் மீட்டர்கேஜ் இரயில் பாதைகள் அனைத்தும் அகல இரயில் பாதைகளாக மாற்றிட அனுமதி!

● 1,828 கோடி ரூபாய் செலவில் 90 இர யில்வே மேம்பாலங்கள் கட்ட அனுமதி! சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம்!

● ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

● திருச்சி, கோவை, மதுரை விமான நிலை யங்கள் விரிவாக்கம்!

● சென்னைக்கு அருகே தேசிய கடல்சார் பல்கலைக்கழகம்!

● திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகம்!

● கிண்டி – கத்திப்பாரா, கோயம்பேடு, பாடி யில் மிகப்பெரிய மேம்பாலங்கள்! கரூர், ஈரோடு, சேலம் உயர்தொழில்நுட்ப ஜவுளிப்பூங்கா!

## தென் மாவட்டங்களில் இயற்கைப் பேரிடரின் போது அமைச்சர்கள் மக்களோடு மக்களாக இருந்து - வேண்டியதை எல்லாம் செய்து கொடுத்தார்கள்!

● துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர்வழிப் போக்குவரத்து வசதிகள் போன்றவை அந்தக் காலகட்டத்தில் உருவாக்கியது. இன்னும் நிறைய இருக்கிறது!

**தமிழ்நாட்டை வெறுத்த, வஞ்சித்த ஒரே பிரதமர் மோடி!**

இவை அனைத்தும் ஒன்றிய அரசின் கூட்ட ணியில் தலைவர் கலைஞரின் வழிகாட்டுதலில், தி.மு.க. கொண்டு வந்த திட்டங்கள். இந்த மாதிரி பட்டியலிட்டுக் கூறுங்கள் என்றுதான் நான் பிரதமரை மிகுந்த பணிவோடு கேட் கிறேன். அதுகூட உங்களால் முடியவில்லை

ஏன் என்றால், தமிழ்நாட்டையும் – தமிழ் மக் களையும் உங்களை மாதிரி வெறுத்த – வஞ் சித்த ஒரு பிரதமர், இந்திய வரலாற்றிலேயே கிடையாது!

மாண்புமிகு மோடி அவர்களே நீங்கள் வடிக் கும் கண்ணீரை உங்கள் கண்களே நம்பாது பிறகு எப்படி தமிழ்நாட்டு மக்கள் உங்களை நம்புவார்கள்?

**மோடி அறிவித்த ஒரே ஒரு திட்டம் 'எய்ம்ஸ்' – அதுவும் நிறைவேறவில்லை!**

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமை யும் என்று அறிவித்தீர்களே நீங்கள் அறிவித்த ஒரே ஒரு சிறப்புத் திட்டம் அதுதான். அறிவித்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது! பத்து ஆண்டு கள் ஓடிவிட்டது!

உங்கள் குஜராத் மாடல் நிர்வாகத்திற்கு அது தான் எடுத்துக்காட்டு! ஆனால் திராவிட மாடல் நிர்வாகத்தின் எடுத்துக்காட்டு சொல்லவா?

அதே மதுரையில், நூலகம் அறிவித்தோம். ஜல்லிக்கட்டு அரங்கம் அறிவித்தோம். சென்னையில் மருத்துவமனை அறிவித்தோம்.

**மதுரையில் அறிவு ஆலயமாக 'கலைஞர் நூற்றாண்டு நூலகம்'!**

மூன்று ஆண்டுகளாகத்தான் ஆட்சியில் இருக்கிறோம். இன்றைக்கு மதுரையில் கம்பீர மாக கலைஞர் நூற்றாண்டு நூலகம் மாணவ – மாணவிகளுக்கான அறிவு ஆலயமாக செயல்படுகிறது.

தமிழர்களின் பண்பாட்டு அடையாளமான ஜல்லிக்கட்டுக்காகக் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் மிடுக்கோடு காட்சியளிக் கிறது! பல்வேறு மக்களின் உடல்நலனை காக் கும் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை சென்னையில் சிறப்பாகச் செயல்படுகிறது. ஆனால் உங்கள் எய்ம்ஸ் மருத்துவமனையை பூதக்கண்ணாடி வைத்து தேடினால்கூட கண்டுபிடிக்க முடியவில்லை! அதனால்தான் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர் கள் ஒரு செங்கல்லை எடுத்துக்கொண்டு ஊர் ஊராகக் காட்டிக் கொண்டு வருகிறார்.

**தமிழ்நாடு மீனவர்களைக் காத்திட வகையற்ற பிரதமர் மோடி!**

சமீபத்தில் கன்னியாகுமரிக்கு வந்த பிரதமர் மோடி, ஒரு அபத்தமான குற்றச்சாட்டை வைத் திருக்கிறார். இலங்கைக் கடற்படையால் தமிழ் நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதற்குத் தி.மு.க.வும் – காங்கிரசும்தான் காரணம் என்று கூறி இருக்கிறார். பத்து வருடமாக, தி.மு.க.வும் காங்கிரசுமா ஆட்சியில் இருக்கிறது?

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களைக் கைது செய்ததை வேடிக்கை பார்த்தது உங்கள் ஆட்சிதான். தமிழ்நாட்டு மீனவர்களைத் தாக்கி – கைது செய்து, படகுகள் – வலைகளைப் பறித்து – சித்திரவதை செய்கிறது இலங்கைக் கடற்படை. 56 இன்ச் என்று இறுமாப்புடன் சொல்லிக் கொள்கிறீர்களே தமிழ்நாட்டு மீனவர் கள் கைது செய்வதைக் கண்டிக்க, தடுத்து நிறுத்த, உங்களுக்கு ஏன் துணிச்சல் வர வில்லை? ஏன் தைரியம் இல்லை?

இலங்கையைப் பார்த்து பயப்படுகிறீர்களா? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர்கூட தாக்கப்பட மாட்டார்கள் என்று 2014–ஆம் ஆண்டு பிரதமர் ஆவதற்கு முன்னால் இதே கன்னியாகுமரியில் கூறினீர்களே

அதுமட்டுமா, அப்போது என்னவெல்லாம் கூறினீர்கள்? தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படு வதற்கு அன்னை சோனியா காந்தி அவர்களும், அம்மையார் ஜெயலலிதா அவர்களும்தான் கார ணம் என்று கூறினீர்கள். பத்தாண்டுகள் முடிந் துவிட்டதே! இப்போது பெயர்களை மட்டும் மாற்றி, தி.மு.க.வும் – காங்கிரசும்தான் காரணம் என்று கூறுகிறார்.

பத்தாண்டு காலத்தில் பிரதமர் மோடி எது வும் செய்யவில்லை என்பதற்கு, இப்படி ஒப்பு தலை அவரே தருகிறார். 2014–இல் இருந்து, 2024–க்குள் பத்து ஆண்டுகள்தான், தமிழ் நாட்டு மீனவர்கள் மேல் வரலாற்றிலேயே, அதிக அளவிலான தாக்குதல்

**சிலருக்குச் சாதகம் செய்திட மட்டும் ஆட்சி நடத்தும் மோடி!**

நாங்கள் எத்தனை கடிதம் எழுதியிருப்போம் நம்முடைய எம்.பி.க்கள் எத்தனை முறை இதைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசியிருப் பார்கள்? இலங்கை மாதிரியான அண்டை நாட் டைப் பார்த்தே, இந்த அளவிற்குப் பயப்படும் ஆட்சியை நடத்தும் பிரதமர் மோடி, பத்தாண்டு களுக்கு முன்னால் இருந்த காங்கிரஸ் ஆட்சி யைக் குறை சொல்லிக் கொண்டு இருக்கிறார்

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், பிர தமர் மோடியின் முழுநேர வேலை என்ன தெரி யுமா? இன்றைக்குப் பண்டித நேருவை என்ன சொல்லித் திட்டலாம்? அன்னை சோனியாவை வசை பாட முடியுமா? சகோதரர் ராகுல் காந்தி யைப் பார்த்து, பயம் இல்லாதது போல் எப்படி காட்டிக்கொள்ளலாம்!

எல்லாவற்றிற்கும் மேல், தேர்தலுக்கு ஒரு ரூபாய்கூட செலவு செய்யவிடாமல் காங்கிரஸ் வங்கிக் கணக்கை முடக்கி, பா.ஜ.க.வின் தேர் தல் பத்திர ஊழலை எப்படி திசைதிருப்பலாம் இதைத்தான் பிரதமர் மோடி சிந்தித்துக் கொண் டிருக்கிறார்...

மோடியின் ஆட்சி அவருக்கு நெருக்கமான சிலருக்கு மட்டுமே சாதகமான ஆட்சி. ஆனால், நாம் அமைக்கப் போகும் இந்தியா கூட்டணி ஆட்சி எல்லோருக்கும் பொதுவான ஆட்சி!

ஒரே மதம்! ஒரே மொழி! ஒரே உணவு! ஒரே பண்பாடு! ஒரே தேர்வு! ஒரே தேர்தல்! ஒரே வரி! என்று ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டிருக் கிறது பா.ஜ.க. இந்தப் பல்லவியை அனுமதித் தால், ஒரே ஒரு மனிதர் மன்னராக இருக்கும் ஆட்சியாக இந்தியா மாற்றப்பட்டு விடும்.

**எந்தக் கவலையும் இல்லாத – பாதம் தாங்கி பழனிச்சாமி!**

ஜனநாயகம், மதச்சார்பின்மை, சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி ஆகியவற்றைப் பாதுகாக்கும் நமது அரசியல் சட்டத்தையே மாற் றிவிடுவார்கள். நாடு இப்படிப்பட்ட பேராபத்தில் சிக்கியிருக்கிறது ஆனால் இதுபற்றி எந்தக் கவ லையும் இல்லாமல் எந்தக் கொள்கையும் இல் லாமல் வளைந்த முதுகுடன் வலம் வருகிறார் பழனிசாமி! பாதம்தாங்கி பழனிசாமி.

> **பா.ஜ.க.விற்கு வாக்களிப்பது அவமானம்! எதிர்காலச் சந்ததிக்குச் செய்யும் துரோகம் என்பதை மக்களுக்குப் பதிய வைக்க வேண்டும்!**

நடப்பது நாடாளுமன்றத் தேர்தல்! பத்தாண் டுகளாக ஒன்றியத்தில் ஆட்சியிலிருந்து, நாட் டைப் படுகுழியில் தள்ளியுள்ள பிரதமர் மோடி பற்றியோ – பா.ஜ.க. பற்றியோ – கண்டித்துப் பேசத் தெம்பு இருக்கிறதா? பழனிசாமி அவர்களே

**அவமானத்தின் அடையாளம்!**

உங்களின் கள்ளக்கூட்டணி கபட நாடகத்தில் கூட பா.ஜ.க.வை எதிர்ப்பதற்கான துணிவு இல் லையா? கேள்விக்குறிபோல் வளைந்தே இருப் பது, அவமானத்தின் அடையாளமில்லையா? பா.ஜ.க.விற்கு எதிரான வாக்குகளை எப்படியா வது பிரிக்க வேண்டும் என்று களமிறக்கப்பட்டி ருக்கும் மறைமுக பா.ஜ.க. வேட்பாளர்கள்தான், பழனிசாமியால் களமிறக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. வேட்பாளர்கள்!

பழனிசாமி அவர்கள், தமிழ்நாட்டு மக்களிடம் மட்டுமல்ல, அ.தி.மு.க. தொண்டர்களிடமும் செல்வாக்கை இழந்துவிட்டார். சிறுபான்மை மக் களுக்கு எதிரான குடியுரிமைத் திருத்தச் சட் டத்தை நாடாளுமன்றத்தில் ஆதரித்து வாக்க ளித்த கட்சி பழனிசாமியின் அ.தி.மு.க.

**முஸ்லிம்களுக்கு எதிராக – எடப்பாடியின் கபட நாடகம்!**

குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகத் தி.மு.க. சார்பில் நாங்கள் ஒரு கோடி பேரிடம் கையெழுத்து வாங்கும் இயக்கத்தை நடத்திய போது – ”எந்த முஸ்லீம் பாதிக்கப்பட்டார்? – என்று பா.ஜ.க.விற்கு டப்பிங் பேசியவர்தான் பழனிசாமி. இப்போது பா.ஜ.க.வின் கதை – திரைக்கதை – வசனம் – இயக்கத்தில் தனியா கப் போட்டி போடும் கபட நாடகத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# 16 லட்சம் குழந்தைகள் பயன்பெறும் ‘காலை உணவுத் திட்டம்’!

## கழகத் தலைவர் - முதல்வர் உரை - 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

நேற்று பழனிசாமி திருச்சியில் பேசினாரே பா.ஜ.க.வை விமர்சித்து அவர் வாயில் இருந்து ஒரு வார்த்தையாவது வந்ததா? இதுதான் கள்ளக் கூட்டணி! பா.ஜ.க.வை விமர்சிக்காமல், எதிர்க்காமல், தமிழ்நாட்டையே நாசப்படுத்தத் துணைபோகும் பழனிசாமி, ”ஒற்றை விரலால் ஓங்கி அடிப்போம் என்று சபதம் எடுக்கிறார். தன்னுடைய விரல்களால் தமிழ்நாட்டு மக்களின் கண்ணைக் குத்திய பழனிசாமி எடுப்பது சபதம் அல்ல; வெற்றுச் சவடால்! மாவீரர்கள் பூலித்தேவனும் – வீரபாண்டிய கட்டபொம்மனும் – மருதுபாண்டியர்களும் – சுந்தரலிங்கமும் – கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரும் – மகாகவி பாரதியாரும் – போராடிப் பெற்ற விடுதலையால் உருவான நாட்டில் – சர்வாதிகார ஆட்சி தலைதூக்குவதை நாம் அனுமதிக்கக் கூடாது.

அய்யா வைகுண்டர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார், மார்ஷல் நேசமணி, பெருந்தலைவர் காமராசர் போன்ற ஒப்பற்ற தியாகிகள் பிறந்த நம் மண்ணுக்கு ஒரு வரலாறு இருக்கிறது; ஒரு பண்பாடு இருக்கிறது! எப்படிப்பட்ட அடிமைத்தனங்களிலிருந்து நாம் மீண்டு வந்திருக்கிறோம் என்று ஒரு போதும் மறக்கக் கூடாது!

உங்கள் ஆதரவுடன் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சரான நான் – உங்களுக்காகச் செய்து கொடுத்த சாதனைகளை – தீட்டிக் கொடுத்த திட்டங்களை இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் இப்போது பின்பற்றி வருகின்றனர். சிறப்பான திட்டங்களை இந்தியா முழுமைக்கும் அமல்படுத்த இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும்.

### அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி! அதுவே நமது இலக்கு!

எல்லாருக்கும் எல்லாம்தான் நம்முடைய திராவிட மாடல் அரசின் ஃபார்முலா! கடைக்கோடியில் இருக்கும் ஒவ்வொரு மனிதரின் முகத்திலும் மகிழ்ச்சியைக் கொண்டுவர வேண்டும். இதுதான் நம்முடைய இலக்கு!

கொரோனாவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஆட்சிக்கு வந்தவுடனே வழங்கிய நாலாயிரம் ரூபாய் மக்களுக்கு எவ்வளவு உதவிகரமாக இருந்தது! எவ்வளவு மகிழ்ச்சியைத் தந்தது! அதற்கு, இந்தக் கன்னியாகுமரியைவிட பெரிய எடுத்துக்காட்டு வேண்டுமா? அந்த மகிழ்ச்சிதான் இங்கு இருக்கும் நாகர்கோயில் பகுதியைச் சேர்ந்த வேலம்மாள் பாட்டியின் முகத்தில் புன்னகையாக வெளிப்பட்டது. அந்தப் புன்னகை தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனை குடும்பங்களிலும் இருந்ததால்தான், வேலம்மாள் பாட்டியின் ஃபோட்டோ வைரல் ஆனது!

### எங்கள் அண்ணன் ஸ்டாலினின் “தாய் வீட்டுச் சீர்”!

அதுமட்டுமா, கோடிக்கணக்கான தாய்மார்கள் முகத்தில் புன்னகையையும் கோடிக்கணக்கான தமிழ்நாட்டுக் குடும்பங்களில் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிற திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

”எங்கள் அண்ணன் ஸ்டாலின் கொடுக்கும், தாய்வீட்டுச் சீர் இருக்கிறது என்று மாநிலம் முழுவதும் ஒரு கோடியே 15 லட்சம் சகோதரிகள் உரிமையோடும், பாசத்தோடும் சொல்லும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

வெறும் வயிற்றுடன் குழந்தைகள் பள்ளிக்கு வரக்கூடாது குழந்தைகள் நலமாக இருந்தால்தான், நாடு வளமாக இருக்கும் என்று, பெருந்தலைவர் காமராசர் தொடங்கிய மதிய உணவுத் திட்டம் போன்றே, நமது ஆட்சியில், நாள்தோறும் 16 லட்சம் குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தில் சாப்பிடுகிறார்கள்!

தமிழ்நாட்டு மாணவர்கள் திறன்மிக்க இளைஞர்களாக உருவாக வேண்டும் – உலகம் முழுவதும் தமிழர்கள் அறிவாற்றலால் வெல்ல வேண்டும் என நாம் உருவாக்கியிருக்கும், ‘நான் முதல்வன்’ திட்டத்தால், 28 லட்சம் இளைஞர்கள் இதுவரைக்கும் பயனடைந்திருக்கிறார்கள்...

மகளிர் படிக்கச் செல்ல வேண்டுமா – வேலைக்குச் செல்ல வேண்டுமா – உறவினர்களைச் சந்திக்கச் செல்ல வேண்டுமா – பேருந்தில் கட்டணம் கிடையாது! அதுதான், 445 கோடி முறை மகளிர் பயணங்கள் மேற்கொண்ட ‘விடியல் பயணம்’ திட்டம்!

பெண் பிள்ளைகள், அரசுப் பள்ளியில் படித்துவிட்டு உயர்கல்விக்குப் போகிறார்களா – மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம்!

வேலைக்காக வெளியூரில் இருக்கும் பெண்கள், பாதுகாப்பாகத் தங்குவதற்கு, ‘தோழி விடுதி திட்டம்!’

நம்முடைய திட்டங்கள் பயனாளிகளிடம் முறையே சென்று சேருவதை உறுதி செய்ய, சமீபத்தில் தொடங்கிய ”நீங்கள் நலமா திட்டம்!

இப்படியான நம்முடைய திராவிட மாடல் திட்டங்களை இந்தியா முழுவதும் விரிவுபடுத்த நமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்புதான் இந்த நாடாளுமன்றத் தேர்தல் களம்.

### சாதனைகளாக மலரப் போகும் ‘இந்தியா’ கூட்டணியின் வாக்குறுதிகள்!

ஒட்டுமொத்த இந்தியாவுக்கான வாக்குறுதிகளை தேர்தல் அறிக்கையாக வழங்கியிருக்கிறோம் நாளை ஒன்றியத்தில் இந்தியா கூட்டணி அமைந்ததும் சாதனைகளாக மாறப்போகும் அந்த வாக்குறுதிகளில் சிலவற்றை மட்டும் தலைப்புச் செய்திகளாகச் சொல்ல விரும்புகிறேன்

- பத்தாண்டுகளாக சாமானிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று கொஞ்சம்கூட நினைத்துப் பார்க்காமல், மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் தொடர்ந்து உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!
- சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும்!
- தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் வேலை நாட்கள் 100–ல் இருந்து, 150 நாட்களாகவும் – ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.
- உலர் மீன் முற்றங்கள் கட்டுதல் போன்ற மீனவர்களுக்குத் தேவையான தொழில் கட்டமைப்புப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.
- பாரம்பரிய மீனவ சமுதாய மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.
- தேசிய மீனவர் நல ஆணையம் அமைக்கப்படும்.
- ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கையை உருவாக்க அமைக்கப்பட்ட, மீனாகுமாரி குழுவின் அறிக்கை கைவிடப்படும்.
- மீன்பிடித் தடைக்காலங்களில் மீனவர்களுக்கு மாற்றுப் பொருளாதார வேலை வாய்ப்புகளை உருவாக்க, மீனவக் குடும்ப உறுப்பினர்களுக்கு, குறிப்பாக, பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு, மீன்கள் பதப்படுத்துதல், மீன் வளர்ப்பு, மீன் தீவனம் தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படும்.
- மீனவ சமுதாய மக்களை அவசர காலத்தில் பாதுகாக்க ஹெலிகாப்டர் தளம் தேவையான இடங்களில் அமைக்கப்படும்.
- புதிய கல்விக் கொள்கை ரத்து!
- ஒன்றிய அரசுப் பணிகளுக்குத் தமிழில் தேர்வு.
- உலகப் பொதுமறையான திருக்குறள், தேசிய நூலாக அறிவிக்கப்படும்.
- இதுமட்டுமல்ல, திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிய ‘புதிய ரயில்வே கோட்டம்’ அமைக்க ஆவன செய்யப்படும்.
- அம்பாசமுத்திரம், வி.கே.புரம் சாலையில், அம்பை ராணி பள்ளி பக்கத்தில் இருக்கும் இரயில்வே கேட்டில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் தூண்டில் வளைவு இல்லாத கிராமங்களுக்கு, தூண்டில் வளைவு அமைக்கப்படும்.
- குமரி மாவட்டத்தில் மீன்களைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய நவீன தொழில்நுட்பம் கொண்ட பதப்படுத்தும் நிலையம் உருவாக்கப்படும்.
- குமரி முதல் களியக்காவிளை வரையும், காவல்கிணறு முதல் நாகர்கோயில் வரையும், நான்குவழிச் சாலைக்காக நிலங்களைக் கொடுத்தவர்களுக்கு உடனடியாக, இழப்பீட்டுத் தொகை வழங்க ஆவன செய்யப்படும்.
- விளவங்கோடு பகுதியில் ரப்பர் தொழிற்சாலை அமைக்க ஆவன செய்யப்படும்.
- ஏ.வி.எம். கால்வாயைச் சுத்தம் செய்து மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வர ஆவன செய்யப்படும்.

இப்படியான திட்டங்களை நிறைவேற்ற உங்கள் பேராதரவுடன் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும்.

### பா.ஜ.க.வுக்கு அளிக்கும் வாக்கு – தமிழ்நாட்டுக்கு வைக்கும் வேட்டு!

ஒன்று மட்டும் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன் தமிழுக்கும் – தமிழினத்துக்கும் – தமிழ்நாட்டுக்கும் – விரோதமான கட்சி பா.ஜ.க. பா.ஜ.க.வுக்கு அளிக்கும் வாக்கு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வைக்கும் வேட்டு! அதை மட்டும் மறந்துவிடாதீர்கள்! தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. – தமிழ்நாட்டைப் பாழ்படுத்திய அ.தி.மு.க. – இரண்டுபேரையும் ஒரு சேர வீழ்த்துங்கள்.

கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் விஜய் வசந்த் அவர்களுக்கும்; திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் அவர்களுக்கும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தாரகை கத்பெர்ட் அவர்களுக்கும் கை சின்னத்தில் வாக்களிக்குமாறு உங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.

### ‘பாசிசம் – மதவாதம் வீழ்ந்தது!’ எனும் புதிய வரலாறு தொடங்கப்படும்!

இந்தியாவின் எல்லை தொடங்கும் நம்முடைய குமரிமுனை இந்தியாவிற்கே ”கை காட்டி வழிகாட்டட்டும்! இந்தியத் துணைக்கண்டம் தொடங்கும் இந்த இடத்தில் இருந்து, ”பாசிசமும் மதவாதமும் வீழ்ந்தது! ஜனநாயகமும் சகோதரத்துவமும் வென்றது! என்ற புதிய வரலாறு தொடங்கட்டும்!

நாற்பதும் நமதே!

நாடும் நமதே!

பாசிசத்தை வீழ்த்த – இந்தியாவைக் காக்க – உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன் உங்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அழைக்கிறேன் நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

நன்றி! வணக்கம்!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## மோடி அவர்களே... நீங்கள் வடிக்கும் கண்ணீரை உங்கள் கண்களே நம்பாது... பிறகு எப்படி தமிழ்நாட்டு மக்கள் நம்புவார்கள்?

காட்பாடி தொகுதியில் சிப்காட்- ஐ.டி. பார்க் அமைக்க நடவடிக்கை!

# டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை அதிக வாக்குகளில் வெற்றி பெறச் செய்வீர்!

## தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

*வேலூர், மார்ச். 27-*

காட்பாடி தொகுதியில் சிப்காட் - ஐ.டி. பார்க் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்றும் அரக்கோணம் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை அதிக வாக்குகள் வழங்கி வெற்றி பெறச் செய்வீர் என்றும் தேர்தல் பிரச்சாரத்தில் பேசியபோது அமைச்சர் துரைமுருகன் குறிப்பிட்டார்.

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் டாக்டர். ஜெகத்ரட்சகனை ஆதரித்து கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் வாக்கு சேகரித்தார்.

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட காட்பாடி சட்டசபை தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் தி.மு.க. தேர்தல் பணிமனை திறப்பு விழா மற்றும் வேட்பாளர் அறிமுக விழா சித்தூர் பஸ் நிறுத்தம் அருகே நடந்தது.

நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். பகுதிச் செயலாளர் துணை மேயர் எம்.சுனில் குமார் , பரமசிவம், வன்னியராஜா ஆகியோர் வரவேற்றனர். வேலூர் மாநகர கழக செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அனைவரையும் வாழ்த்தி பேசினார். நிகழ்ச்சியில் கழக பொதுச்செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளரும் கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் அரக்கோணம் நாடாளுமன்ற கழக வேட்பாளர் ஜெகத்ரட்சகனை அறிமுகம் செய்து பேசினார்கள்.



அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-

இங்கு போட்டியிடும் ஜெகத்ரட்சகன் ஒரு கொடை வள்ளல், அந்த புண்ணியம் தான் அவரை பல ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றி இருக்கிறது.

அவரது வளர்ச்சியை கண்டு ரெய்டு நடத்தி வழக்கு மேல் வழக்கு போட்டார்கள். அவற்றையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு என் கட்சிக்காரன் என்னை காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையோடு முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவை, அவர் ஏற்று வேட்பாளராகி இருக்கிறார்.

### ஒரே தொகுதியில் 12 முறை வென்றவன்!

காட்பாடி சட்டசபை தொகுதியில் கடந்த தேர்தலில் துரோகங்கள் தலைவிரித்தாடியது. அதை விவரிக்க விரும்பவில்லை. ஆனாலும் வெற்றி பெற்றேன். எனக்கு கிடைத்த கழக தோழர்கள் வேறு யாருக்கும் கிடைத்தார்களா என தெரியவில்லை. இந்தியாவிலேயே வேறு எந்த எம்.எல்.ஏ.வுக்கும் இல்லாத பெயரை காட்பாடி மக்கள் எனக்கு வாங்கி கொடுத்திருக்கிறார்கள்.

ஒரே தொகுதியில் 12 முறை நின்று வென்றவன், என்ற பெயரை நான் மட்டுமே வைத்திருக்கிறேன். காட்பாடி தொகுதியில் பல் கலைக் கழகம், தாலுகா அலுவலகம், கோர்ட்டு, சட்டக் கல்லூரி கொண்டு வந்தேன். காங்கேயநல்லூர் வழியாக கலெக்டர் அலுவலகத்திற்கு செல்ல பாலாற்றில் மேம்பாலம் கட்டி அடிக்கல் நாட்டினேன். இன்னும் பல பாலங்கள் கட்டி வருகிறேன்.

ஒரு தொழிற்சாலை இல்லையே என்ற குறையை போக்க காட்பாடி அருகே மகி மண்டலத்தில் சிப்காட் அமைக்க, வரும் பட்ஜெட்டில் அறிவிப்பு வர இருக்கிறது. பெல் தொழிற்சாலை அருகில் ஒரு ஐ.டி. பார்க் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன். இந்த தேர்தலில் ஜெகத்ரட்சகனுக்கு அதிக ஓட்டு வாங்கி கொடுக்க வேண்டும் துரைமுருகன் அதிக ஓட்டுக்கள் வாங்கி கொடுப்பார் என்ற பெயரை ஏற்படுத்திட வேண்டும்.

இவ்வாறு பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம். சுனில் குமார் மற்றும் ‘இந்தியா’ கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.



வேலூர் தொகுதி கழக வேட்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார். அவருடன் மாவட்டச் செயலாளர்கள் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., க.தேவராஜி எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.




2024 நாடாளுமன்றத் தேர்தல் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

## கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**27-03-2024, புதன்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| மதிய உணவு இடைவேளை | | | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.





# கிறிஸ்துவ - இஸ்லாமிய - செங்கோல் ஆதினம் மற்றும் பல்வேறு அமைப்புகள் 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு!

## தூத்துக்குடியில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தெரிவித்தனர்!

**தூத்துக்குடி, மார்ச் 27 -**

**கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய தொகுதிகளில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை கிறிஸ்துவ இஸ்லாமிய செங்கோல் ஆதினம் பல்வேறு சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்!**



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி சார்பில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று (26.3.2024) காலை, தூத்துக்குடியில், கிறிஸ்துவ இஸ்லாமிய மற்றும் பல்வேறு சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து, இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர். ஆதரவு அளித்தவர்கள் விவரம் பின்வருமாறு:

**திருநெல்வேலி மாவட்டம்**

அந்தோணி சாமி ஆயர் அவர்கள்

பர்னபாஸ் அடிகளார், பேராயர் அவர்கள்

அருட்தந்தை டாக்டர் S. மரியதாஸ் SJ அவர்கள்

D.V.P. பொன்ராஜ் அவர்கள்

ஹாஜி Er செய்யது அகமது அவர்கள்

ஹாஜி M.K.M. செய்யது அகமது கபீர் அவர்கள் ஹாஜி M.K.M. அகமது ஷாபி அவர்கள்

ஹாஜி நவாஸ்கான் அவர்கள்

ஹாஜி F.காதர் முஹைதீன் அவர்கள்

ஹாஜி M.ஷேக் அப்துல்லா அவர்கள்

மீனாட்சி சுந்தரம் அவர்கள்

செல்லையா அவர்கள்

**கன்னியாகுமரி மாவட்டம்**

பால பிரஜாதிபதி அடிகளார் அவர்கள்

நசரேன் சூசை ஆயர் அவர்கள்

அருட்சகோதரிகள்

**தூத்துக்குடி மாவட்டம்**

தூத்துக்குடி தென்னிந்திய திருச்சபை திருமண்டல பேராயர்

LaySecretary

செங்கோல் ஆதினம்

தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம்

All India Chamber of Commerce

ஐக்கிய வியாபாரிகள் சங்கம்

மீனவர் நல சங்கம்

தூத்துக்குடி CSI திருச்சபையினர்

ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற பாடுபடுவதாகவும் உறுதி அளித்தனர்.

இந்நிகழ்வின்போது, கழக துணைப் பொதுச் செயலாளரும் தூத்துக்குடி தொகுதி கழக வேட்பாளருமான கனிமொழி கருணாநிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதாஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், அமைச்சர் மனோ தங்கராஜ், தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி, சிறுபான்மையினர் நல ஆணைத் தலைவரும் காங்கிரஸ் கட்சியில் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

### மக்களவை எனும்போரில்

# 'இந்தியா' கூட்டணி பெரும் வெற்றி பெற்று நல்லாட்சி அமைந்திடும்!

## சி.பி.எம். வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

*திண்டுக்கல், மார்ச் 27 -*

திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுகிறது . வேட்பாளர் சச்சிதானந்தம் வேட்புமனு தாக்கல் செய்த பிறகு பிரச்சாரத்தில் திண்டுக்கல்லில் வாக்குகள் கேட்டு பொதுமக்களிடையே அமைச்சர்கள் இ.பெரியசாமி பிரச்சாரம் செய்தார் அப்போது அவர் குறிப்பிட்டதாவது:



திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி தொகுதியின் வேட்பாளராக கிராமம் கிராமமாகச் சென்று அடிப்படை பிரச்சினைகளை கையில் எடுத்து மக்களோடு தொடர்ந்து பயணித்து வரும் பொதுவுடமை சிந்தனை கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சச்சிதானந்தம் போட்டியிடுகிறார்.

ஏழை பங்காளிகளின் சின்னம், பாட்டாளி மக்களின் சின்னம், அந்த சின்னம் நமக்கு கிடைத்திருப்பது பெருமை. திண்டுக்கல் மாவட்டம் ஏழை எளிய மக்கள், பாட்டாளிகளுக்காக நடத்தும் கட்சியான சிபிஎம் நமது இந்தியா கூட்டணியில் அங்கம் வகிப்பது நமக்கெல்லாம் பெருமை. மக்களவை எனும் இந்த போரில் இந்தியாவில் ஒரு நல்லாட்சி உருவாகிட நாம் அனைவரும் ஒன்று பட்டு பாடுபட வேண்டும். நமது சின்னம் அரிவாள் சுத்தியல் நட்சத்திரம்.

**மோடி ஆட்சி வங்கக்கடலில் தூக்கியெறியப்படும்.**

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் இந்திய அளவில் மூன்றாவது இடத்தில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் முன்னாள் எம். பி வேலுச்சாமி. அவர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ஒரு பைசா கூட வீணாக்காமல் திண்டுக்கல் தொகுதி முழுவதும் மக்களுக்கு பயனளிக்கும் வகையில் பயன்படுத்தியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை செல்போன் அளவில் டவர் வசதி இல்லாத இடங்களுக்கு, அவற்றை அமைத்துக் கொடுத்ததோடு, பழநி மற்றும் திண்டுக்கல் மதுரை ரயில்வே பாதையில் சுரங்க பாலங்கள் கட்டிக் கொடுத்துள்ளார்.

நிலக்கோட்டை தொகுதியில் நீர்வரத்து பாதைகளை சீரமைத்துள்ளதுடன், குளங்களுக்கு தண்ணீர் வருவதற்கான நடவடிக்கைகளை தனது சொந்த செலவில் மேற்கொண்டவர்.

கொரோனா கால கட்டத்தில் நிதிகள் நிறுத்தப் பட்டாலும், மக்களுக்கு தேவையான திட்டங்களை அவர் பூரணமாக செயல்படுத்தி வந்துள்ளார்.

திண்டுக்கல் சீனிவாசனும் திண்டுக்கல் தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர் அமோக வெற்றி பெறுவார் என்று கூறியுள்ளனர்.

இதற்கான விடை ஜூன் 4ம் தேதி அவர்களுக்கு தெரியவரும். தி.மு.க. கூட்டணி எவ்வளவு பெரிய வெற்றியை தமிழ் நாட்டில் பெறும் என்பதை அப்போது அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். ஏனெனில் யார் நல்லாட்சி செய்கிறார்கள் என்பது மக்களுக்கு நன்றாக தெரியும். எனவே அவர்களின் ஆதரவால் கடந்த தேர்தலை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் திண்டுக்கல் தொகுதியில் கழக கூட்டணி வேட்பாளர் அமோக வெற்றி பெறுவார் இவ்வாறு அமைச்சர் பெரியசாமி பேசினார்.

பிரச்சாரத்தின் போது அமைச்சர்அர.சக்கரபாணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பி.செந்தில் குமார் ஆகியோர் பேசினர்.



திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி நத்தம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஊராட்சிகளான சிறுமலை, தோட்டனூத்து, அடியனூத்து, அ.வெள்ளோடு உட்பட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் அமைச்சர் அர.சக்கரபாணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து தீவிர பிரச்சாரம் செய்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டிஅம்பலம், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வெள்ளிமலை, திண்டுக்கல் யூனியன் தலைவர் ராஜா, கழக நிர்வாகி ராதாகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.

# தமிழக முதல்வரின் சாதனைகளைக் கூறி வாக்கு சேகரிப்பு!

## சிவகங்கையில் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. பேட்டி!

*சிவகங்கை . மார்ச் 27 .*

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக கார்த்தி ப. சிதம்பரம் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடுகிறார். சிவகங்கையில் வேட்புமனு தாக்கல் செய்தபிறகு செய்தியாளர்களிடம் கார்த்தி ப.சிதம்பரம் கூறியதாவது.



'இந்தியா' கூட்டணி சார்பில் தமிழகத்தில் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் தலைமையி லான 'இந்தியா' கூட்டணியில் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக மீண்டும் போட்டியிடுகிறேன். என்னை மீண்டும் போட்டியிட வாய்ப்பு அளித்த அகில இந்திய தலைவர் கார்கே, அன்னை சோனியாகாந்தி ,தலைவர் ராகுல் காந்தி ஆகியோருக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். இம்முறை சிவகங்கை மக்களின் குரலாக எனது குரல் நாடாளுமன்றத்தில் ஒங்கி ஒலிக்கும். தமிழக முதல்வர் தலைமையிலான 'இந்தியா' கூட்டணி தமிழகம் மற்றும் புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் அமோக வெற்றி பெறும். இந்திய அளவில் 'இந்தியா' கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும். பா.ஜ.க. படு தோல்வியடையும் .

இந்த தேர்தல் பிரச்சாரத்தில் பா.ஜ.க. அரசு மாநில அரசுகளுக்கு பாரபட்சமாக நிதிவழங்கும் பிரச்சினை,ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு ,சி. ஏ. ஏ சட்டம் தேர்தல் பத்திர முறைகேடுகள், மற்றும் 10 ஆண்டு கால பா.ஜ.க. மக்கள் விரோத ஆட்சி குறித்து மக்களிடம் எடுத்துக் கூறி வாக்கு சேகரிப்பேன். எனது வெற்றிக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான மூன்றாண்டு கால அரசின் சாதனைகளில் மகத்தான நான்கு முத்தான திட்டங்கள் ஆன பெண்களுக்கு இலவச பயண பேருந்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, காலை சிற்றுண்டி திட்டம் மகளிர் கல்லூரி படிக்க மாதம் தோறும் வழங்கும் ஊக்கத்தொகை போன்ற நான்கு முக்கிய திட்டங்களை மக்களிடம் எடுத்து கூறி வாக்கு சேகரிப்பேன்.

'இந்தியா' கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் அதில் தி.மு.க. முக்கிய இடம்பெறும். இதில் பா.ஜ.க. அரசு கடந்த 10 ஆண்டுகளில் செய்துள்ள ஊழல்கள் தனி விசாரணைக்கு உட்படுத்தப்படும். மாநிலத்தினை பா.ஜ.க. அரசு வஞ்சித்து வருகிறது. 'இந்தியா' கூட்டணி ஆட்சியில் அவைகள் சீரமைக்கப்ப படும். ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு மாற்றி அமைக்கப்படும். நீட்தேர்வை விரும்பாத மாநிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படும். தி.மு.க . 'இந்தியா' கூட்டணியில் முக்கிய அங்கம் பெறும். தமிழகத்தில் தி.மு.க. பெரிய வாக்கு வங்கியாக திகழ்கிறது.

இவ்வாறு கார்த்தி ப.சிதம்பரம் கூறினார்.

பேட்டியின்போது அமைச்சர்கள் கே ஆர். பெரிய கருப்பன், எஸ். ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் உடன் இருந்தார்கள்.

### தேர்தல் பிரச்சாரம் "சூடு" பிடித்தது



## ஆரணி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தரணிவேந்தனை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்யாறில் மக்களிடையே வாக்குச் சேகரிப்பு!



## தலைவர் தலைமையில்

# ‘திராவிட மாடல்’ அரசு வெல்லட்டும்! பாசிசம் ஒழியட்டும்!

### காஞ்சிபுரம் அண்ணா இல்ல வருகைப் பதிவேட்டில் –

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை வாசகம்!






காஞ்சிபுரம், மார்ச் 27 –

கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் ‘அண்ணா இல்லத்தில்’ நேற்று முன்தினம் மாலை, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துவணங்கியபின்னர், அங்குவைக் கப்பட்டுள்ளவருகைப்பதிவேட்டில், “தலைவர் தலைமையில் திராவிட மாடல் அரசு வெல்லட்டும்! பாசிசம் ஒழியட்டும்!” எனும் எழுச்சிமிகு வாசகத்தை எழுதி, சூளுரைத்தார்.

இந்நிகழ்வின்போது–காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் –அமைச்சர் தா.மோ.அன்பரசன், தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., கழகமாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் க.செல்வம், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக் ஆகியோர் உடனிருந்தார்கள்.

அப்பதிவேட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுதியதாவது :



Visitors Book

| Date | Visitors Name | Contact No. | E-mail / Address | Your Valuable Comments & Suggestions |
|---|---|---|---|---|
| 25/03/24. | உதயநிதி ஸ்டாலின் | | | |

பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சி இல்லத்தில் இருந்து ‘மாநில உரிமைகளை மீட்க.. தலைவரின் குரல்’ உதயம் சூட்ட நாடாளுமன்ற பிரச்சாரப் பயணத்தை துவக்குவதில் பெருமை கொள்கிறோம்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் புகழ் ஓங்குக! தலைவர் தலைமையில் திராவிட மாடல் அரசு வெல்லட்டும். பாசிசம் ஒழியட்டும்.

I BELONG TO THE DRAVIDIAN STOCK.

25/03/24.



திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் சார்பாக திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ அறிமுகம் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமை வகித்தார். மத்திய மாநகர செயலாளர்கள் அன்பழகன், மதிவாணன் ஆகியோர் வரவேற்றனர். இதில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, தெற்கு மாவட்டச் செயலாளரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், பழனியாண்டி, கதிரவன், ஸ்டாலின் குமார், இனிகோ இருதயராஜ், வை.முத்துராஜா, முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோவை அறிமுகம் செய்து வைத்தனர். திருச்சி தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ, நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களிடம் ஆதரவு கோரினார்.



தூத்துக்குடியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வீதிவீதியாக வாக்குச் சேகரித்தார். மாவட்டச் செயலாளர் – அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் உடனுள்ளார்.

# நெல்லை மாவட்டம் - நாங்குநேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரைகேட்க அலை அலையாகத் திரண்ட மக்கள் காணீர்!











கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2024) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளர் விஜய் வசந்த் அவர்களையும், திருநெல்வேலியில் போட்டியிடும் வழக்கறிஞர் ராபர்ட் புரூஸ் அவர்களையும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தாரகை கத்பெர்ட் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மனோ தங்கராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப், ரூபி மனோகரன், பிரின்ஸ், ராஜேஷ் குமார், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆவுடையப்பன், மைதீன்கான், மகேஷ், ஜெயபாலன் மற்றும் 'இந்தியா' கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.





விழுப்புரம் மற்றும் கடலூர் நாடாளுமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி வெற்றி வேட்பாளர்கள் விழுப்புரம் ரவிக்குமார், கடலூர் விஷ்ணு பிரசாத் ஆகியோரை ஆதரித்து வாக்குகளைச் சேகரிக்க வருகிற 5 ஆம் தேதி விழுப்புரம் வருகை தரும் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் அரங்கத்தை அமைக்கும் பணியினை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் @ மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜ் , மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, ஒன்றியச் செயலாளர்கள் தே. முருகவேல், ஜி. இரவிச்சந்திரன், பி. வி. ஆர்.சு.விசுவநாதன், வி. ஜி. பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ. தினகரன், மாணவர் அணி அமைப்பாளர் பா. ஸ்ரீ வினோத், தொண்டர் அணி அமைப்பாளர் கபாலி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் டி. என். ஏ தமின், வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப. அன்பரசு, ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் செல்வ பிரேம் உள்ளிட்ட ஒன்றிய, நகர நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூரில் நடைபெற்ற மாபெரும் செயல் வீரர் கூட்டத்தில் தேனி நாடாளுமன்ற ‘இந்தியா’ கூட்டணி கழக வேட்பாளர் தங்க தமிழ்செல்வனை அறிமுகம் செய்து வைத்து வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், சரவணக்குமார், தொகுதி பொறுப்பாளர் சுப.த.சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

### மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்கள் தொடர்ந்திட, புதிய திட்டங்களைக் கொண்டு வர

# கழக வேட்பாளர் அருண் நேருவை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்யுங்கள்!

## தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

*டால்மியாபுரம், மார்ச் 27 -*

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அருண்நேரு புள்ளம்பாடி ஒன்றியத்தில் 33 ஊராட்சிகள் 2 பேரூராட்சிகளில் திறந்தவேனில் வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். பொதுமக்கள் பெண்கள் ஆர்வமுடன் அவரை வரவேற்று உபசரித்தனர்.



அப்போது அவருடன் பிரசாரத்தில் ஈடுபட்ட தி.மு.க. முதன்மை செயலாளரும்,தமிழக நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருமான கேஎன்.நேரு பேசுகையில், 1985 ம் ஆண்டு புள்ளம்பாடியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய சேர்மன்,தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு லால்குடி தொகுதியின் எம்.எல்.ஏ.வாகவும், தமிழக அமைச்சராகவும் வெற்றிபெற்று திருச்சி மாவட்டத்தில் லால்குடி தொகுதிக்குத் தேவையான திட்டங்களை கொண்டு வந்தார். அரசு திட்டங்கள், கலைக்கல்லூரி வேளாண்மை கல்லூரி, தொழிற்பயிற்சிநிலையம், ஊராட்சி ஒன்றிய வேளாண்மை மற்றும் கல்லூரிகளுக்கு தேவையான அலுவலக கட்டிடங்கள், தடுப்பணைகள்,சாலைகள், மேம்பாலங்கள் போக்குவரத்துக்குத் தேவையான புதிய பேருந்துகள்,சாலை வசதிகள் அதிக அளவில் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு தேவையான நலத்திட்ட உதவிகள் தொடர்ந்திடவும்,மேலும் தேவையான நலத்திட்ட உதவிகள் பெற்றிடவும், தமிழக முதல்வர் ஆசி பெற்ற சின்னமான உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் அருண்நேருவை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

அப்போது திருச்சி தி.மு.க. மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, லால்குடி சவுந்தரபாண்டியன் எம்.எல்.ஏ., லால்குடி நகரச் செயலாளர் துறை,காங்கிரஸ் சார்பில் வடக்கு மாவட்ட தலைவர் கலை, முன்னாள் மாவட்ட தலைவர் ஜெய்பிரகாஷ், மாவட்ட பொருளாளர் துரை கந்தசாமிபுள்ளம்பாடி ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் இளங்கோவன், செல்வராசா, மாவட்ட கவுன்சிலர் ஜெயலட்சுமி கருணாநிதி, நகர செயலாளர்கள் கல்லக்குடி பால்துரை, புள்ளம்பாடி முத்துக்குமார், வட்டார காங்கிரஸ் தலைவர் அர்ஜுனன், ம.தி.மு.க. துரையரசன், விடுதலைசிறுத்தைகள் கட்சி விடுதலை இன்பன், விஜயகுமார், முன்னாள், இந்நாள் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தி.மு.க. நிர்வாகிகள், கிளை பொறுப்பாளர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக புள்ளம்பாடி ஒன்றியம் முதுவத்தூர் கிராமம தொடர்ந்து மேலரசூர், கீழரசூர், ஒரத்தூர், எம்.கண்ணனூர், மால்வாய், சரடமங்கலம், நம்புகுறிச்சி, சிறுகளப்பூர்,தெரணிபாளையம், ஊட்டத்தூர், நெய்குளம், கண்ணாக்குடி, பிகே.அகரம், குமுளூர், ரெட்டிமாங்குடி, பு.சங்கேந்தி, தாப்பாய்,வரகுப்பை, அலுந்தலைப்பூர், கல்லக்குடி, ஆலம்பாடி மேட்டூர், விரகாலூர், திண்ண குளம், புதூர் பாளையம்,ஆலம்பாக்கம், கோவாண்டகுறிச்சி, வெங்கடாசலபுரம், புள்ளம்பாடி,இ.வெள்ளனூர்,ந.சங்கேந்தி உள்ளிட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். ஆங்காங்கு பொது மக்கள் ஆரத்தி எடுத்து , வெற்றி திலகமிட்டு, மாலை அணிவித்து வரவேற்பு அளித்தனர்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர்

# இரா.முத்தரசன் தேர்தல் பிரச்சாரம்!

*சென்னை, மார்ச் 27 -*

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு விடுத்துள்ள செய்தி அறிக்கை வருமாறு :-

நடைபெறும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் 28.03.2024 ஆம் தேதி முதல் 17.04.2024 ஆம் தேதி வரை தமிழ்நாடு முழுவதும் வாக்கு சேகரிப்பு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.



அவரது சுற்றுப் பயணம் விபரம் வருமாறு:-

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர். இரா.முத்தரசன் - தேர்தல் பரப்புரை பயணம் தேதி கிழமை தொகுதி

28.03.2024 வியாழன் பெரம்பலூர் - நாடாளுமன்ற தொகுதி, 29.03.2024 வெள்ளி அரியலூர் , 30.03.2024 சனி, ஞாயிறு சென்னை, 31.03.2024 - 01.04.2024 திங்கள் (காலை) வேலூர் திங்கள் (மாலை) திருப்பத்தூர், 02.04.2024 செவ்வாய் கிருஷ்ணகிரி, 03.04.2024 புதன் தருமபுரி, 04.04.2024 வியாழன் சேலம் , 05.04.2024 வெள்ளி திருவாரூர் - மன்னார்குடி, 06.04.2024 சனி திருச்சி, 07.04.2024 ஞாயிறு விழுப்புரம், 08.04.2024 திங்கள் சிதம்பரம், 09.04.2024 செவ்வாய் மயிலாடுதுறை, 10.04.2024 புதன் தஞ்சாவூர் - தெற்கு, 11.04.2024 வியாழன் நாகப்பட்டினம் தொகுதி, 12.04.2024 வெள்ளி திருப்பூர் , 13.04.2024 சனி திண்டுக்கல், 14.04.2024 ஞாயிறு மதுரை , 15.04.2024 திங்கள் விருதுநகர், 16.04.2024 செவ்வாய் தூத்துக்குடி, 17.04.2024 புதன் நாகப்பட்டினம் தொகுதி,

மேற்கண்டவாறு இரா. முத்தரசன் தேர்தல் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறோம் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ‘இந்தியா’ கூட்டணி சார்பில் - சிவகங்கை தொகுதியில்

# காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம் வேட்பு மனு தாக்கல்!

*சிவகங்கை, மார்ச் 27 -*

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் தற்போதைய காங்கிரஸ் எம்பி கார்த்தி ப சிதம்பரம் மீண்டும் போட்டியிடு கிறார். அவர் நேற்று முன்தினம் 25ம்தேதி தனது வேட்பு மனுவை சிவகங்கையில் உள்ள மாவட்ட ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திருமதி ஆஷா ஆஜித்திடம் தாக்கல் செய்தார்.

அவருடன் அமைச்சர்கள் கேஆர். பெரிய கருப்பன், எஸ். ரகுபதி, சிவ.வீ. மெய்ய நாதன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் சென்றிருந் தார்கள்.

காங்கிரஸ் கட்சியின் மாற்று வேட்பாளராக மாவட்ட தலைவர் சஞ்சய் காந்தி வேட்புமனு தாக்கல் செய்தார்.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி., முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் வி. ராஜசேகரன், சுப்புராம் , தி.மு.க. சார்பில் மாவட்ட துணைச் செயலாளர்கள் கே.எஸ். எம்.மணிமுத்து, திருமதி ஜோன்ஸ் ரூசோ, காங்கிரஸ் கட்சி சார்பில் விஜய் தியாகராஜன், எம்.ராஜரத்தினம், சண்முகராஜன், மாநில பொதுச் செயலாளர் சி. ஆர். சுந்தர்ராஜன், மகளிர் அணி வித்யா கணபதி, தி.மு.க. மகளிரணி நிர்வாகிகள் திலகவதி கண்ணன், மார்கரெட்கமலா, மஞ்சுளா, ஹைதர்அலி அம்பலம் மூஸ்லீம்லீக், மற்றும் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் தொண்டர்கள் வாழ்த்தினார்கள்.

### தமிழகத்தை வஞ்சிக்கும்

# ஒன்றிய அரசை தூக்கி எறியும் தேர்தலாக அமையும்!

## திண்டுக்கல் சி.பி.எம். வேட்பாளரை ஆதரித்து அமைச்சர் அர.சக்கரபாணி பிரச்சாரம்!

*திண்டுக்கல், மார்ச் 27 -*

திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி கழகத்தின் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து நத்தம் சட்டமன்ற தொகுதி திண்டுக்கல் தெற்கு ஒன்றியத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி தீவிர பிரச்சாரம் செய்தார்.

தெற்கு ஒன்றிய ஊராட்சி பகுதிகளான சிறுமலை ஊராட்சி, தோட்டனூத்து ஊராட்சி, அடியனூர் ஊராட்சி , அ. வெள்ளோடு ஊராட்சி உட்பட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது.

கடந்த திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் கழகம்பெற்ற வெற்றியானது தமிழகத்தில் வாக்கு சதவீதத்தில் முதலாவதாகவும், இந்திய அளவில் மூன்றா வதாகவும் அமைந்தது.

இந்த தேர்தலில் கழகத்தின் தலைமையிலான இந்தியா கூட்டணி மார்க்சிஸ்ட் வேட்பாளர் சச்சிதானந்தத்தின் வெற்றி இந்தியாவிலேயே அதிக கவனத்தை பெறும் வகையில் அமைய வேண்டும். தமிழகத்தை வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை தூக்கி எறியும் தேர்தலாக இந்த தேர்தல் கண்டிப்பாக அமையும். நமது முன்னாள் எம்.பி. வேலுச்சாமி தனது சொந்த செலவில் பல்வேறு பணிகளை செய்து மக்களின் கவனத்தை பெற்றார்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

கூட்டத்தில் முன்னாள் நத்தம் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டிஅம்பலம், தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வெள்ளிமலை , திண்டுக்கல் யூனியன் தலைவர் ராஜா ஒன்றிய நிர்வாகி ராதாகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதும்

# என் அன்பு மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துகள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாழ்த்துச் செய்தி!

*சென்னை, மார்ச் 27 -*

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:



நீங்கள் பயின்ற ஒரு அறைதான், நண்பர்களோடும், ஆசிரியர்களோடும் மகிழ்ச்சியாக உரையாடிய ஒரு அறைதான் உங்களுக்கான தேர்வு அறை.

உங்களின் ஆசிரியர்கள் தான் தேர்வறை கண்காணிப்பாளர்களாக இருப்பார்கள்.

உங்களின் நண்பர்கள் தான் உங்களைச் சுற்றி அமர்ந்து தேர்வு எழுதுவார்கள். அது உங்களின் இடம். ஆகவே எதை நினைத்தும் பதற்றம் அடையாதீர்கள். பயம் கொள்ளாதீர்கள்.

தன்னம்பிக்கையோடு தேர்வு எழுதுங்கள். அது தான் உங்களுக்கான வெற்றியைத் தேடித் தரும்.

மகிழ்ச்சியோடு சென்று வாருங்கள், வாழ்த்துகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி

# கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி சங்கராபுரத்தில் தேர்தல் அலுவலகம்!

## உதயசூரியன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

*சங்கராபுரம், மார்ச் 27-*

தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி சங்கராபுரத்தில் தி.மு.க. தேர்தல் அலுவலகம் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் உதயசூரியன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு தேர்தல் அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் தே.மலையரசன் அனைவரிடத்திலும் வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டு வாக்குகள் சேகரித்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் சங்கராபுரம் பேரூர்ச் செயலாளர் துரை.தாகப்பிள்ளை அனைவரையும் வரவேற்றார். தி.மு.க. மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி, ஒன்றியச் செயலாளர் ந.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் ஒன்றியக் குழுத் தலைவர் திலகவதி நாகராஜன், பாப்பாத்தி, எம்.எஸ்.குமார், வழக்கறிஞர்கள் பரமகுரு, ஜனார்த்தனன், பால அண்ணாமலை, ரமேஷ் குமார், பிரபாகரன், தொழிலதிபர் ஆறு.கதிரவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் வேல்.பழனியம்மாள், காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர் ஜெய்கணேஷ், தி.மு.க. மற்றும் இந்திய கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிடும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் கே .நவாஸ் கனி அறிமுகக் கூட்டம் மாவட்ட தி.மு.க. சார்பில் நடந்தது. மாவட்ட கழக செயலர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் முன்னிலை வகித்தார். உடன் நாடாளுமன்ற வேட்பாளர் கே நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் முருகேசன், கருமாணிக்கம் தொகுதி பொறுப்பாளர்கள் முன்னாள் மேயர் குழந்தைவேலு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம் கணேசன்,மற்றும் அக்ரி கணேசன்மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப.திவாகரன், செயற்குழு உறுப்பினர் மிஷா அகமது தம்பி, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன், மற்றும் மாவட்ட துணைச் செயலாளர் கருப்பையா, மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் உள்ளனர்.



தேனி நாடாளுமன்றத் தொகுதி தேனி தெற்கு மாவட்டம் கம்பம் ஒன்றியம் க. புதுபட்டி பேரூரில் தேர்தல் அலுவலகத்தை தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர் தங்கபாண்டியன் மற்றும் பேரூர் கழகச் செயலாளர் பார்த்திபன், பேரூராட்சி தலைவர் சுந்தரி பாஸ்கரன், ரவி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## பா.ஜ.க.வின் நாடகம், மக்கள் அறிவார்கள்: தமிழ்நாட்டில் ஒரு தொகுதிகூட அவர்களுக்குக் கிடைக்காது!

# தேர்தலுக்காக நரேந்திர மோடி சுற்றிச் சுற்றி வருகிறார்!

## காஞ்சிபுரம் தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!



**காஞ்சிபுரம், மார்ச் 27 -**

**காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பிரமாண்டமான தேர்தல் பரப்புரையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, காஞ்சிபுரம் நாடாளுமன்ற வேட்பாளர் ஜி.செல்வத்துக்கு, ஆதரவாக வாக்கு சேகரித்தார்.**

**அப்போது அவர், ``பா.ஜ.க.வின் நாடகம், மக்கள் அறிவார்கள், தேர்தலுக்காக ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி சுற்றிச் சுற்றிவருகிறார், அவர்களுக்கு தமிழ்நாட்டில் ஒரு தொகுதி கூட கிடைக்காது என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு: -

இந்திய அளவில் வெற்றி பெறக்கூடிய இந்தியா கூட்டணி சார்பாக, நம் கழகத்தின் வெற்றி வேட்பாளராகப் போட்டியிடுகிற முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்த்தையும் அன்பையும் பெற்ற வேட்பாளர், நம் கழகத் தலைவர் முதலமைச்சரின் அன்பை பெற்ற வேட்பாளர், எல்லாவற்றை விடவும் முக்கியமாக காஞ்சிபுரம் மக்களின் அமோக அன்பையும் ஆதரவையும் பெற்ற வேட்பாளர் செல்வம் அவர்களுக்கு நம் வெற்றிச் சின்னம் உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### ஜி.செல்வத்தை வெற்றி பெற செய்வீர்!

2019 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்துக்கு நான் வந்திருந்தேன். அப்போது அண்ணன செல்வம் அவர்களை, 2 லட்சத்து 87 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தீர்கள். நாடாளுமன்றத்தில் அவர் உங்களுடைய குரலாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டார். உங்களின் தொகுதிப் பிரச்சினைகளைப் பேசினார். எனவேதான் தலைவர் அவர்கள் இவரின் சிறப்பான செயல்பாடுகளுக்காக மீண்டும் அவருக்கு இந்த வாய்ப்பை அளித்திருக்கிறார். அவரை உங்களிடம் ஒப்படைத்து இருக்கிறார். இனிமேல் உங்களுடைய கடமை அவரை வெற்றி பெற வைத்து, சென்ற முறை வாங்கிய வாக்கு வித்தியாசத்தை விட, அதிகமான வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

இந்தத் தேர்தலில், 5 லட்சம் வாக்குகள் பெற்று அண்ணன் செல்வம் அவர்களை வெற்றி பெற வைத்துவிட்டீர்கள் என்றால், நான் மாதம் இரண்டு முறை காஞ்சிபுரம் மாவட்டத்துக்கு வந்து உங்கள் கூட இருந்து உங்கள் பிரச்சினை அத்தனையையும் நான் தீர்த்து வைக்கிறேன். நீங்கள் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றினீர்கள் என்றால், நான் சொன்ன வாக்குறுதியை 100 சதவிகிதம் நான் காப்பாற்றுவேன்.

### என்னென்ன சாதனைகள்?

முதலில் காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்பதை, அவற்றில் சிலவற்றை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். காஞ்சிபுரம் புற்றுநோய் மருத்துவமனையை தரம் உயர்த்த சுமார் 13 கோடி ரூபாய் செலவில் அதிநவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையினை தரம் உயர்த்த சுமார் 36 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுராந்தகம் தொகுதியில் 120 கோடி ரூபாய் செலவில் மதுராந்தகம் ஏரி தூர்வாரப்பட்டு, ஏரிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு நாம் செய்திருக்கக் கூடிய சாதனைகள் என்னவென்று பார்த்தால், மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு 343 கோடி ரூபாய்க்குப் புதிய புதை வடிகால் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

7 கோடி ரூபாய் செலவில் ராஜாஜி மார்க்கெட் கட்டிடம் கட்டும் பணி மற்றும் 4.5 கோடி ரூபாய் மதிப்பில் நேரு மார்க்கெட் கட்டிடம் கட்டும் பணி ஆகியவை நடைபெற்று வருகின்றன. 10 கோடி ரூபாயில் மாநகராட்சி அலுவலகம் கட்டும் பணி, 2.5 கோடி ரூபாயில் மேகவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுகிற பணி ஆகியவையும் நடைபெற்று வருகின்றன. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாநகராட்சியின் முக்கியப் பகுதிகளில் 5 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. 6 ஆரம்ப சுகாதார மையங்கள், ஒரு துணை சுகாதார மையம் ஆகியவற்றுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நேரத்தில் நம் தலைவர் அவர்கள், சில வாக்குறுதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். நம் கூட்டணி வெற்றி பெற்றால் காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதிக்கு என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார் என்று இங்கே ஞாபகப்படுத்துகிறேன்.

### மருத்துவக் கல்லூரி!

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குத் தனியாக ஒரு மருத்துவக் கல்லூரி கொண்டு வரப்படும். அரக்கோணத்தில் இருந்து செங்கல்பட்டிற்கு காஞ்சிபுரம் வழியாகச் செல்லும் ரயில் பாதை, இரு வழிப்பாதையாக மாற்றித் தரப்படும். செங்கல்பட்டில் உள்ள ஒருங்கிணைந்த நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி வளாகத்தை மேம்படுத்தி உற்பத்தி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். காஞ்சிபுரம் கிழக்கு ரயில்வே நிலையத்தில் செயல்படும் பலதரப்பட்ட சரக்குப் போக்குவரத்தும், மிகப்பெரிய ஆட்டோமொபைல் சரக்கு முனையமாகச் செயல்படும் போக்குவரத்தும் மேலும் மேம்படுத்தப்படும்.

காஞ்சிபுரம் மற்றும் சுற்று வட்டார மக்களுடைய தேவையைக் கருத்தில் கொண்டு கூடுதல் மின்சார ரயில் சேவை வழங்க வலியுறுத்தப்படும். காஞ்சிபுரம் நெசவாளர்களுக்குப் பட்டு, பாவு, ஜரிகை போன்ற பொருட்களுக்கு முழுமையாக ஜி.எஸ்.டி வரி நீக்கப்படும். கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் மண்ணின் மைந்தர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கண்டிப்பாகத் தரப்படும்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு தேர்தலின் போதும் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுச் சொல்வார், 'சொல்வதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்று. அப்படி அவர் சொன்னதை எல்லாம் செய்து காட்டிய தலைவர் நம் கலைஞர் அவர்கள். நம் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், 2021 இல் ஆட்சிக்கு வந்தோம். அப்போது என்ன நிலைமை என்று உங்களுக்குத் தெரியும். கோவிட் இரண்டாவது பெருந்தொற்று.

### அனுமதி கிடையாது!

மகளிர் இவ்வளவு பேர் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறீர்கள். 200 வருடத்திற்கு முன்பு மகளிர் வீட்டை விட்டு வெளியே வர முடியாது. இன்னும் சொல்லப் போனால் மேலாடை போடுவதற்குக் கூட உங்களுக்கு அனுமதி கிடையாது. இதையெல்லாம் எதிர்த்து உருவானதுதான் சமூக நீதி இயக்கம், திராவிட இயக்கம். ஆனால் நம்முடைய பெண்கள் படிக்க வேண்டும், பள்ளிக்கூடம் படித்தால் மட்டும் பத்தாது, கல்லூரிக்கும் வந்து படிக்க வேண்டும் என்று 'புதுமைப்பெண்' என்ற திட்டத்தை தலைவர் அவர்கள் உருவாக்கினார்.

### பல்லைக் காட்டிய புகைப்படம்!

நேற்று நம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் திருச்சியில் சென்று பேசியிருக்கிறார். 'உதயநிதி திருப்பி கல்லைத் தூக்கிவிட்டார், கல்லைத் தூக்கிவிட்டார்' என்று. இதுதான் அந்தக் கல். இதுதான் மோடி அவர்களும் எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் அமித்ஷா அவர்களும் 2019 ஆம் ஆண்டு எய்ம்ஸ் மருத்துவமனைக்காக அடிக்கல் நாட்டி விட்டுச் சென்ற கல். இருந்தது ஒரே கல் அதையும் நான் எடுத்து வந்துவிட்டேன். நீங்கள் திருப்பி மருத்துவமனை கட்டுகின்ற வரைக்கும் நான் இந்தக் கல்லைத் திருப்பிக் கொடுக்க மாட்டேன். கண்டிப்பாகக் கொடுக்கமாட்டேன்.

என்ன தெரியுமா சொல்கிறார் எடப்பாடி பழனிச்சாமி? 'உதயநிதி, திருப்பி கல்லை எடுத்துவிட்டார் என்ற ஸ்கிரிப்ட்டை மாற்றிப் பேச வேண்டும்' என்கிறார். நானாவது கல்லைக் காட்டினேன். இங்கே ஒருத்தர் பல்லைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார் பாருங்கள். நரேந்திர மோடியிடம் வெறும் பல்லைத் தான் அவர் காட்டிக் கொண்டிருக்கிறார். இது எப்போது எடுத்த புகைப்படம் தெரியுமா? 2019 ஜனவரி 27 ஆம் தேதி, அதே மதுரை எய்ம்ஸ் அடிக்கல் நாட்டு விழாவில் எடுத்த பல்லைக் காட்டிய புகைப்படம்.

நான் ஏன் என் கொள்கையை மாற்றிப் பேச வேண்டும்? எங்களுக்கு இருக்கிற ஒரே கொள்கை, 'எங்களுக்கு எய்ம்ஸ் மருத்துவமனை வேண்டும். எங்களுக்கு நீட் தேர்வு வேண்டாம். எங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டும்' என்பதுதான். திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்களே என் வாயை நோண்டாதீர்கள். உங்களை மாதிரி நேரத்திற்குத் தகுந்த மாதிரி, ஆளுக்குத் தகுந்த மாதிரி ஸ்கிரிப்ட்டை மாற்றிப் பேச எனக்குத் தெரியாது.

நீங்கள் ஓ.பி.எஸ்.யைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள். சசிகலாவைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள். மோடியைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள். ஜெ.தீபாவைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள். ஜெ.தீபாவின் டிரைவரைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள்.

உங்களை மாதிரி மாற்றிப் பேசுவதற்கு தி.மு.க ஒன்றும் பச்சோந்தி கிடையாது. நான் கலைஞரின் பேரன். நான் என்னுடைய கொள்கையைத்தான் பேசுவேன். எங்களின் மாநில உரிமைகளை மீட்பதற்கு என்னென்ன போராட்டங்கள் தேவையோ, அத்தனைப் போராட்டங்களையும் நான் நடத்துவேன்.

இப்போது தேர்தல் வருகிறது என்பதால், கடந்த 10 நாட்களாக இங்கேயே சுற்றிச் சுற்றி வருகிறார் மோடி அவர்கள். அவர் இங்கேயே தங்கி இருந்தாலும் அவர்களால் ஒரு தொகுதி கூட இங்கே வெற்றி பெற முடியாது. நான் சவால் விடுகிறேன். ராமநாதபுரம் தொகுதியில்தான் நிற்கப் போகிறேன் என்று மோடி சொன்னதாகப் புரளி எல்லாம் கிளப்பிவிட்டார்கள். அதனால்தான் ராமநாதபுரத்தில் என்னுடைய முதல் பிரச்சாரத்தை ஆரம்பித்தேன்.

காஞ்சிபுரத்தில் இன்று சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா இதையெல்லாம் உணர்ந்துதான் அப்போதே சொன்னார், 'ஆட்டுக்கு தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையே இல்லை' என்று சொன்னார். 'வின்னர்' படம் பார்த்திருக்கிறீர்களா? 'வின்னர்' படத்தில் ஒரு கேரக்டர் வரும். அதே கேரக்டர்தான் இவர். தைரியமாக வருவது மாதிரி வருவார். ஆனால் பயந்து ஓடிப் போய் விடுவார். முதல் சட்டமன்றக் கூட்டத்தொடருக்கு வந்து நாம் எழுதிக் கொடுத்ததைப் படிக்க வேண்டியதுதான் அவருடைய வேலை. அவர் ஒரு தபால்காரர், அவ்வளவுதான். நாம் சொல்வதை, ஒன்றிய அரசிடம் சொல்ல வேண்டும். ஒன்றிய அரசு சொல்வதை, நம்மிடம் சொல்ல வேண்டும்.

ஆனால் ஆளுநர் என்ன செய்தார் தெரியுமா? தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர், டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரை எல்லாம் தவிர்த்துவிட்டு அவர் இஷ்டம் போல் பேசினார். நம் தலைவர் எழுந்து சட்டமன்றத்தில் சொல்லிவிட்டார். 'திரு.ஆளுநர் அவர்களே, நீங்கள் பேசுவது ஒன்றுமே அவைக் குறிப்பில் ஏறாது. நாங்கள் சொல்வதுதான் ஏறும்' என்றவுடன் விறுவிறு என்று கோபித்துக் கொண்டு ஓடிவிட்டார், கைப்புள்ள..!

### தமிழ்த்தாய் வாழ்த்து!

அதே மாதிரி இன்னொன்று. ஆளுநர் என்ன சொன்னார்? தமிழ்நாடு என்ற பெயரை மாற்ற வேண்டும் என்று சொன்னார். திடீரென்று ஒரு நாள் தமிழ்நாடு என்ற பெயர் எனக்குப் பிடிக்கவில்லை, பெயரை மாற்றுங்கள் என்று சொன்னார். அனைத்துத் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

ஒட்டுமொத்த தமிழ்நாடும் எதிர்ப்புத் தெரிவித்தோம். அதன் பிறகு, 'என்னை மன்னித்து விடுங்கள். நான் தப்பாகப் பேசிவிட்டேன்' என்றார்.

இப்போது திருப்பி என்ன செய்திருக்கிறார் என்றால், சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் 'தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடத் தேவையில்லை. தேசிய கீதம் பாடினால் போதும். தமிழ்த்தாய் வாழ்த்து பாடத் தேவையில்லை' என்று சொன்னார்.

ஆளுநர் அவர்களே, எங்களுக்குத் தேசிய கீதம் முக்கியம். ஆனால் அதைவிட முக்கியம், எங்களின் தமிழ்த்தாய் வாழ்த்து. தமிழ்த்தாய் வாழ்த்தின் உரிமையை நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம். எங்க டுக் கொடுக்க மாட்டோம்.

உங்களுக்குத் தெரியும். இப்போது கடைசியாக இரண்டு நாட்களுக்கு முன்பு நம் அமைச்சர்கள் எப்படி அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்களை எல்லாம் ஈ.டி, சி.பி.ஐ, ஐ.டி போன்ற அமைப்புகளை மிரட்டி வைத்திருந்தார்களோ, அதே மாதிரி தி.மு.க அமைச்சர்களையும் மிரட்ட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

நான் பலமுறை சொல்லிவிட்டேன். மோடி அவர்களே, நாங்கள் மோடிக்கும் பயப்பட மாட்டோம். ஈ.டி.க்கும் பயப்பட மாட்டோம்'. நான் கலைஞரின் பேரன். வழக்கு எதுவாக இருந்தாலும் சந்திக்கிறேன் என்று சொன்னேன். பொய் வழக்குகளைப் போட்டு நம் அமைச்சர்களை எல்லாம் கைது செய்தார்கள்.

நம் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் மீது பொய் வழக்குப் போட்டு, இதுவரைக்கும் எட்டு மாதம் சிறைக்குள் இருக்கிறார். 29 முறை ஜாமீனுக்கு விண்ணப்பித்து உள்ளோம். அவர் விரைவில் வெளியே வந்துவிடுவார். விரைவில் நல்ல முடிவு கிடைக்கும்.

அதேபோல் அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்களின் மேல் ஒரு பொய் வழக்கைப் போட்டு, கைது செய்து, அவரைத் தகுதி நீக்கம் செய்தார்கள். நம் தலைவர் அவர்களும் பொன்முடி அவர்களும் உச்ச நீதிமன்றம் வரை சென்று, உச்ச நீதிமன்றம் அவரை அமைச்சர் ஆக்கலாம் என்று சொல்லிவிட்டது. உச்சநீதிமன்றம் ஆளுநரைக் கண்டிக்கிறது. ஆனால் ஆளுநர் முடியாது என்கிறார்.

இந்திய வரலாற்றிலேயே ஓர் உச்ச நீதிமன்ற நீதிபதி, ஆளுநரை இந்த அளவிற்குத் தரக்குறைவாகப் பேசியதே கிடையாது. 'நீங்கள் என்ன ஆளுநர் வேலை பார்க்கிறீர்களா? இல்லை, வேறு வேலை பார்க்கிறீர்களா?' என்றே கேட்டுவிட்டார்கள். நம் தலைவர் அவர்கள் என்ன தெரியுமா செய்தார்? நேராகச் சென்று அண்ணன் பொன்முடி அவர்களுக்கு அமைச்சர் பொறுப்பை ஏற்றிவிட்டு, ஆளுநரிடம் கை கொடுத்துவிட்டு, 'நான் பிரச்சாரத்திற்குத்தான் கிளம்புகிறேன்' என்று சொல்லிவிட்டு அவரிடமே வாழ்த்து வாங்கிவிட்டுப் பிரச்சாரத்தை ஆரம்பித்தார்.

'தயவு செய்து நம்முடைய ஆளுநர் அவர்களையும், நரேந்திர மோடி அவர்களையும் அடிக்கடி வரச் சொல்லுங்கள். எங்களின் பிரச்சாரத்தின் பாதியை அவர்களே முடித்துவிடுகிறார்கள்' என்று நம் தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார்.

### ஏன் வீட்டிற்கு அனுப்ப வேண்டும்?

வருகின்ற ஏப்ரல் 19 ஆம் தேதி வாக்குச் சாவடிக்குச் சென்று, நீங்கள் அண்ணன் செல்வம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். நான் ஒன்றும் தேர்தலுக்குத் தேர்தல் வரும் ஆள் கிடையாது.

ஆனால் நீங்கள் அப்படித்தான் வந்து சந்திக்கிற ஆள். இன்று நான் உங்களிடம் பிரச்சாரத்தில் தேர்தல் வாக்குறுதியைச் சொல்லி இருக்கிறேன்.

நம் சாதனைகளைச் சொல்லி இருக்கிறேன். ஒன்றிய பா.ஜ.க அரசை ஏன் வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன். இதற்குப் பிறகு தலைவர் இங்கு வருவார். நான் சும்மா ட்ரைலர்தான். மெயின் பிக்சர் பின்னாடி வந்து கொண்டிருக்கிறது. அதுதான் நம் தலைவர் அவர்கள்.

இன்னும் ஒரு வாரத்தில் தலைவர் அவர்கள் வருவார், உங்களையெல்லாம் சந்திப்பார்.

ஜூன் 3 ஆம் தேதி, தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் பரிசாக, நாம் 40க்கு 40 தொகுதிளில் வெற்றி பெற வேண்டும். நூறாவது பிறந்தநாள் முடிந்து 101 வது பிறந்த நாளில் அடி எடுத்து வைக்கிறார். இதைவிட மிகப்பெரிய பிறந்தநாள் பரிசை நம் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நாம் கொடுத்துவிட முடியாது. சென்ற தேர்தலில் 39க்கு 38 தொகுதிகளில் வெற்றி பெற்றோம்.

இந்த முறை அந்தச் சாதனையையும் முறியடித்து, கண்டிப்பாக தமிழ்நாடு, புதுச்சேரி சேர்ந்து 40க்கு 40 வெற்றி பெற்று நாம் யாரை முடிவ் செய்கிறோமோ, நம் தலைவர் யாரைக் கை காட்டுகிறாரோ, தமிழ்நாட்டு மக்கள் நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ அவர்தான் அடுத்த பிரதமராக உட்கார வேண்டும் என்றால், ஏப்ரல் 19 ஆம் தேதி வரைக்கும் நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கி பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,

### ஆதரிப்போம் உதயசூரியன்!

உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவருடைய மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாக, குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன்.... ஆதரிப்போம் உதயசூரியன்! உதயசூரியன்!! உதயசூரியன்!!! அண்ணன் செல்வம் அவர்களை வெற்றி பெற வைத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்புங்கள். உங்களின் குரலாக அவர் இருப்பார் என்று கூறிக் கொண்டு, வாய்ப்புக்கும் வரவேற்புக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இதில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், கழக மாணவர் அணிச் செயலாளரும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி. எழிலரசன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், சிறுபான்மை அணியின் மாநிலச் செயலாளர் சுபேர் கான், மாவட்டக் கழக நிர்வாகிகள் இனியரசு, கோகுல் கண்ணன், சன்பிராண்ட் ஆறுமுகம், மலர்விழி குமார், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் தமிழ்ச்செல்வன், மாநில நெசவாளர் அணிச் செயலாளர் அன்பழகன், தொண்டரணி தலைவர் சுகுமாரன், வர்த்தகர் அணி துணைச் செயலாளர் சுந்தர வதனம், வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், காஞ்சிபுரம் மாநகரப் பகுதி கழகச் செயலாளர்கள் திலகர், சந்துரு, தசதன், வெங்கடேசன், ஒன்றியச் செயலாளர்கள் பி.எம்.குமார், படுநெல்லி பாபு, மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் நித்தியா சுகுமார், ஒன்றிய பெருந்தலைவர் மலர்க்கொடி குமார், தேவேந்திரன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



தென்காசி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் தேர்தல் அதிகாரி – மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், பழனி நாடார் எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் சாதிர் ஆகியோர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம் அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதி காட்பாடியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஜெகத்ரட்சகனை ஆதரித்து கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் பேசினார். அருகில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர தி.மு.க செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் எம்.சுனில் குமார் மற்றும் கழக முன்னணியினர், கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.



‘இந்தியா’ கூட்டணியின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் டி.ஆர்.பாலு 25.3.2024 அன்று திருநீர்மலையில் தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், திருநீர்மலை ஜெயகுமார், வே.கருணாநிதி மற்றும் கூட்டணிக் கட்சித் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## நாடு வாழ ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெறவேண்டும்!

# பா.ஜ.க.விடம் இருந்து மதத்தையும், மக்களையும் காப்பாற்றுவது நமது கடமை !

## திருச்செந்தூரில் கனிமொழி கருணாநிதி பிரச்சாரம்!

**தூத்துக்குடி, மார்ச் 27-**

**நாடு வாழ, நலமுடன் திகழ வேண்டும் என்றால், ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்றும் மதத்தையும், மக்களையும் பா.ஜ.க.விடமிருந்து காப்பாற்ற வேண்டியது நம் கடமை என்று - திருச்செந்தூரில் தேர்தல் பிரச்சாரத்தின்போது தொகுதி வேட்பாளர், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.**



தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக மீண்டும் போட்டியிடும் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள திருச்செந்தூர் தேரடித்திடலில் பிரச்சாரம் செய்தார்.

தொடர்ந்து, தெற்கு ரதவீதி, தோப்பூர், வீரபாண்டியன்பட்டினம், அம்பேத்கர் சிலைபிரசாத் நகர், சண்முகபுரம், இராணிமகராஜபுரம் ஆறுமுகநேரி பேரூராட்சி, அடைக்கலப்புரம், காமராஜபுரம், ஆறுமுகநேரி பஜார், செல்வராஜபுரம், திசைக்காவல் தெரு, மடத்துவிளை, கந்தன் குடியிருப்பு, அம்மன்புரம், சோனகன்விளை ஆகிய பகுதிகளில் கூடி நின்ற மக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

பிரச்சாரத்தின்போது வேட்பாளர் கனிமொழி கருணாநிதி பேசியது:-

உங்களுடைய அன்பான வரவேற்புக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது தெருமுனை பிரச்சாரமா அல்லது ஒரு பொதுக்கூட்டமா என்று கேட்கத் தோன்றக் கூடிய அளவிலே இவ்வளவு பெரிய வரவேற்பைத் தந்து இருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் மீண்டும் தூத்துக்குடி வேட்பாளராக நிற்கக் கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கி இருக்கிறார்கள். சென்ற முறை நான் தேர்தலில் நின்ற போது பல பேர் என் மீது வைத்த விமர்சனம், அவர்கள் சென்னையில் இருக்கிறார்கள். நிச்சியமாக தேர்தல் முடிந்து வெற்றி வாய்ப்பு கிடைத்தால் தூத்துக்குடிக்கு திரும்பி வரவே மாட்டார்கள் என்று கூறினார்கள். ஆனால் தூத்துக்குடி என்பது என்னுடைய இரண்டாவது தாய்வீடு என்று சொல்லக் கூடிய அளவிற்கு நீங்கள் என் மீது அன்பைப் பொழிந்து இருக்கிறீர்கள். அதே போல நானும் உங்களோடு நின்று பணியாற்றி இருக்கிறேன் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அந்த உரிமையோடு நான் உங்களிடம் கேட்கிறேன், உங்களுடைய பொன்னான வாக்குகளை உதய சூரியன் சின்னத்தில் அளித்து மீண்டும் உங்களோடு பணியாற்றக் கூடிய வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தர வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இது வெறும் அரசியல் வெற்றிக்கான தேர்தல் இல்லை. நம்முடைய தேர்தல் என்பது இந்த நாட்டை காப்பாற்ற வேண்டிய தேர்தல். நம்முடைய முதலமைச்சர் சொல்வது போல், இது 2வது சுதந்திரப் போராட்டம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். நம்முடைய அடையாளங்களை, நம்முடைய மொழியை, தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது.

### மாநில உரிமைகளை பறிக்கும் ஒன்றிய அரசு!

ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த நாட்டில் இருக்கக்கூடிய எல்லா மாநில உரிமைகளைப் பறிக்கிறது. அப்படி உரிமைகளைப் பறிப்பதற்காக தமிழ் நாட்டு மக்களுடைய வரிப் பணத்தை அரசாங்கத்திடமிருந்து வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால், நம்மிடம் 1 ரூபாய் வாங்கி 26 பைசா தான் திருப்பி கொடுக்கிறார்கள். வெள்ள நிவாரணத்துக்கு இன்று வரை ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. ஆனால், அவர்கள் ஆட்சி செய்யும் உத்தரப் பிரதேசம் 1 ரூபாய் வரி கொடுத்தால் 2 ரூபாய் 2 பைசா திரும்பிக் கொடுக்கிறார்கள். இது ஓரவஞ்சனை, நியாயம் இல்லாமல் ஒரு அரசாங்கம் நடந்து கொள்ளலாமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பெரும்பான்மை மக்கள் சார்ந்துள்ள இந்து மதத்தை இவர்கள் காப்பாற்றுவதற்காகவே பிறந்தவர்கள் போல் தொடர்ந்து பேசுகிறார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், பா.ஜ.க.விடம் இருந்து இந்து மதத்தையும், மக்களையும் காப்பாற்றுவது நமது கடமை. ஏனென்றால் மதத்தைப் பயன்படுத்தி அரசியலுக்கு வந்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, எந்த மக்களால் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார்களோ அவர்களை எதிர்த்து வேலை செய்து கொண்டிருப்பதுதான் பா.ஜ.க.,வின் மோடி அரசு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அடித்தட்டில் இருக்கக் கூடிய மக்கள், உழைக்கக் கூடிய மக்கள், வியாபாரிகள் யாராவது பா.ஜ.க. வாழவைத்து இருக்கிறதா? என்றால் இல்லை. விவசாயிகளுக்கு எதிராகச் சட்டம், தொழிலாளர்களுக்கு எதிராகச் சட்டம், அதுபோல் ஜி.எஸ்.டி. கொண்டுவந்த இங்கே இருக்கக்கூடிய வியாபாரிகளுக்கு அபராதம் விதித்து, வியாபாரம் செய்ய முடியாத அளவுக்குச் சித்திரவதை செய்து கொண்டிருக்கக் கூடியவர்கள் தான் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பா.ஜ.க. என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### எல்லோருக்குமானவர் நம் முதலமைச்சர்!

நம்முடைய முதலமைச்சர், எல்லோருக்குமான முதலமைச்சர், இன்னும் சொல்லப் போனால் எனக்கு ஓட்டுப் போட்டவர்கள், ஓட்டுப் போடாதவர்களுக்கும் சேர்த்துதான் நான் முதலமைச்சர். என நினைக்க கூடிய அளவிற்கு பணியாற்ற வேண்டும் என்று சொன்னவர் முதலமைச்சர். அவருடைய ஆட்சியில் இன்றைக்கு எத்தனையோ புதிய திட்டங்கள் தமிழ்நாட்டுக்காக கொண்டுவரப்படுகிறது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரப்படுகிறது, பெண்கள் இங்கு இருக்கக்கூடிய சகோதரிகளுக்குப் பேருந்துகளில் கட்டணமில்லாத பயணம், விடியல் பயணம்.

### ‘பக்கோடா’ போடச் சொன்ன அமித்ஷா!

அதேபோல் நம்ம வீட்டுப் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகள் ஆக இருக்கட்டும் கல்லூரியில் படிக்கும்போது மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படும், ஏன் என்றால் நம்ம பசங்க படிக்கவேண்டும். படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று விரும்பக்கூடிய ஆட்சி தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

வேலை இல்லையே என்று அமித்ஷா அவர்களைக் கேட்டால், போய் பக்கோடா போடு, அதுவும் வேலைதான் என்று சொல்லக்கூடிய மனது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, முதலமைச்சருக்கும் கிடையாது. எனது பிள்ளைகள் படிக்க வேண்டும், தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதால் தொழிற்சாலைகளைக் கொண்டு வந்து அவர்கள் அங்கே வேலைக்குச் செல்ல வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்கள் தான் நாங்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

### ஆட்சி மாற்றம் மிக மிக அவசியம்!

தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ, இந்த நாடு தலைநிமிர எல்லா மக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றால் இங்கே மட்டுமில்லை, டெல்லியிலும் ஆட்சி மாற்றம் வரவேண்டும். இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும். நாடு நமது ஆகவேண்டும் நாற்பதும் நமது ஆக வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நீண்ட நாள் இந்த பகுதியில் கோரிக்கை என்பது பொன்னங்குறிச்சியில் இருந்து புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று நீங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். விரைவிலேயே அந்த திட்டம் தொடங்கப்படும் என்ற உறுதியை உங்களுக்கு நான் இந்த கூட்டத்தில் வழங்கிக் கொள்கிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் உரையாற்றினார்.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்திய தேசிய காங்கிரஸ் தொகுதி பொறுப்பாளரும் , திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினருமான ஊர்வசி அமிர்தராஜ், இந்தியா கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த கரும்பர், சமத்துவ மக்கள் கழகத்தில் தலைவர் எர்ணாவூர் நாராயணன், சமத்துவ மக்கள் கழக அற்புதராஜ், மக்கள் நீதி மையம் கட்சியைச் சார்ந்த அலெக்ஸ் மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.



தேனி நாடாளுமன்ற வேட்பாளர் தங்க தமிழ்செல்வன் அறிமுகம் மற்றும் கூட்டணி கட்சி கூட்டம் செயற்குழு ஆலோசனைக் கூட்டம் உத்தமபாளையம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. மகாராஜன் எம்.எல்.ஏ. சரவணகுமார் எம்.எல்.ஏ. மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் செல்வேந்திரன், மாநில தீர்மானக் குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார், கொள்கைப் பரப்பு துணை செயலாளர் அம்பிகா பாண்டியன், கம்பம் தொகுதி பார்வையாளர் தனசெல்வம், ஒன்றியச் செயலாளர் அணைப்பட்டி முருகேசன், பேரூர் செயலாளர் காசிம் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், கழக நிர்வாகிகள்கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் அருண் நேரு, லால்குடி புள்ளம்பாடி பகுதியில் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சட்டமன்ற உறுப்பினர் சௌந்தர பாண்டியன், நகரச் செயலாளர் துரை, கோல்டன் ராஜேந்திரன், செல்வராஜ் உட்பட பலர் உடனிருந்தனர்.

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தூத்துக்குடியில் கனிமொழி கருணாநிதியை ஆதரித்து மீனவ மக்களிடம் - வியாபாரிகளிடம் தீவிர வாக்குச் சேகரிப்பு!



தூத்துக்குடி மாநகரில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடைபயிற்சியின்போது வீதி, வீதியாகச் சென்று கனிமொழி கருணாநிதிக்கு வாக்குச் சேகரித்தார்.



தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு ஆதரவாக நேற்று (26.3.2024) காலை வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்ட கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுடன் பொதுமக்கள் உற்சாகமாக செல்ஃபி எடுத்துக்கொண்டனர்.



கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு ஆதரவாக வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டபோது சிறுவர், சிறுமியர்களிடம் அவர்களது படிப்பு குறித்து கேட்டறிந்தார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.3.2024) தூத்துக்குடி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு ஆதரவாக தூத்துக்குடி காமராஜர் காய்கறி சந்தையில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடியில், மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதிக்கு ஆதரவாக வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டபோது, லயன்ஸ் டவுன் பகுதியில் மீனவ மக்கள் அழைத்ததன் பேரில் அவர்களது இல்லத்திற்குச் சென்று தேனீர் அருந்தி மகிழ்ந்தார். உடன் அமைச்சர்கள் பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மேயர் ஜெகன் ஆகியோர் உள்ளனர்.

### தூத்துக்குடியில் நடைபயிற்சியின் போது கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதிக்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்குச் சேகரிப்பு!

## மீனவர்கள், காய்கறி வியாபாரிகள், பொதுமக்கள் திரண்டு உற்சாக வரவேற்பு!



**தூத்துக்குடி, மார்ச் 27 -**

**கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.3.2024) காலையில் தூத்துக்குடி மாநகரில் நடைபயிற்சி மேற்கொண்டபடியே தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு வாக்குச் சேகரிக்கும் பணியையும் சிறப்பாக மேற்கொண்டார்கள்.**

**மாணவ - மாணவிகளுக்கு முதல்வர் வாழ்த்து!**

தமிழ்நாடு முழுவதும் தொடங்கும் அரசுப் பொதுத் தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்கள் எல்லோரும் சிறப்பாகத் தேர்வு எழுதி மகத்தான வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்தியபடியே தூத்துக்குடி மாநகரில் காலையில் நடைபயிற்சிக்குச் சென்ற முதலமைச்சர் அவர்கள் அங்கு தம்மை எதிர்கொண்டு சந்தித்து வணக்கம் கூறிய மாணவ – மாணவிகளிடம் நன்றாகப் படித்து எதிர்காலத்தில் நீங்கள் எல்லாம் சிறந்து விளங்கவேண்டும் என வாழ்த்தினார். அப்போது, அவர்கள், முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தும் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் இரண்டும் எங்களுக்குத் தன்னம்பிக்கை அளிக்கிறது. அதற்காக நன்றி என்று கூறி மகிழ்ந்தனர்.

**மகளிர் குழுவினர் முதல்வருக்கு வாழ்த்து!**

அப்பொழுது முதல்வர் அவர்களைச் சந்தித்த மகளிர் குழுவினர் தாங்கள் செயல்படுத்தும் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் எங்களுக்கு மாதம் 1,000 ரூபாய் வருகிறது. நீங்கள் நல்லா இருக்கணும் என்று முதல்வரை வாழ்த்தினார்கள்.

அப்படியே மீனவ கிராமங்களில் சென்று நடைபயிற்சியோடு வாக்குச் சேகரித்தார் முதல்வர். அப்போது அன்போடு அவரை அழைத்த ஒரு மீனவர் இல்லத்திற்குச் சென்று அவர்கள் வழங்கிய தேநீரைப் பருகியபடியே மீனவர்களின் நலனுக்காக திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களையும் நினைவுபடுத்தினார். அது கேட்டு மகிழ்ந்த மீனவர்கள் உங்களுடைய கடுமையான முயற்சியினால் நீங்கள் நடத்தி வரும் சிறப்பான ஆட்சியினால் தமிழ்நாட்டில் 40 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெறுவோம்.

**அ.தி.மு.க. - பா.ஜ.க.வுக்கு வாக்களிக்க மாட்டோம்!**

உங்களால்தான், புதுடெல்லியில் 'இந்தியா' கூட்டணி ஆட்சி அமையும் என்று உறுதிபடக் கூறினார்கள். அத்துடன் 10 ஆண்டுகாலம் தமிழ்நாட்டைப் பாழ்படுத்திய அ.தி.மு.க.வுக்கும், எங்கள் தூத்துக்குடி பகுதி அடைந்த வெள்ளப் பாதிப்பிற்கு ஒரு பைசா கூட நிதி வழங்காமல் வாக்குக் கேட்க வருகின்ற பா.ஜ.க.வினருக்கும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று கூறியது கேட்டு முதல்வரின் முகத்தில் புன்னகை அரும்பியது.

முதலமைச்சர் அவர்கள், அடுத்து தூத்துக்குடி காய்கறிச் சந்தைக்குச் சென்றார்கள். அங்கே அவரைக் கண்டதும் அங்கிருந்த காய்கறி வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் இன்ப அதிர்ச்சியாக இருந்தது. ஒரு கடையில் காலிபிளவர் விற்ற ஒரு மூதாட்டி முதல்வர் அவர்களை வணங்கி உங்களுக்கே எங்கள் ஆதரவு என்றார். அப்படியே காய்கறி கடைகளை எல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துச் சென்ற முதலமைச்சர் அவர்களை வியாபாரிகள் எல்லாம் மகிழ்ச்சியோடு கை குலுக்கி வரவேற்றார்கள். ஒரு கடையில் இருந்த அத்தனை பேரும் சேர்ந்து முதலமைச்சர் அவர்களுடன் கைகுலுக்கியது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

**பா.ஜ.க.வினரை துரத்தியடித்த மக்கள்!**

வெண்டைக்காய் கடை, அங்கிருந்த பானிபூரி கடை, வெங்காயக் கடை முதலான பல்வேறு கடைகளுக்கும் சென்ற முதலமைச்சர் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்ற வியாபாரிகள், வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களைக் காட்டி, அவர்களுக்கே எங்கள் வாக்கு; உங்களுக்கே என்றும் வெற்றி என்று கூறி மகிழ்ந்தார்கள்.

குளச்சல் பகுதியில் பா.ஜ.க.வினரை துரத்தியடித்த மீனவ மக்கள். லயன்ஸ் டவுன் மீனவ குடியிருப்பில் மீனவர்கள் எல்லாம் திரண்டு நின்று முதலமைச்சர் அவர்களை வரவேற்று தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

முதலமைச்சர் அவர்களின் இந்த நடைபயணத்தின் போது, வேட்பாளர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், மேயர் ஜெகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## வெப்பமா..? அபத்தமா..?

அபத்தமாக உளறுவதற்கு விருது தரலாம் என்றால், அனைத்து விருதுகளுக்கும் தகுதியானவர்கள் பா.ஜ.க.வினர். அதிலும் குறிப்பாக தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலையின் உளறல்கள். ஒவ்வொரு முறையும் தமிழர்களால் எள்ளி நகையாடப்பட்டாலும், தனது முட்டாள்தனமான உளறல்களை மட்டும் நிறுத்துவதேயில்லை. "கோவையில் 2 டிகிரி வெப்பநிலை அதிகரித்ததற்குக் காரணம் திராவிடக் கட்சிகள்" என்ற அவரது உளறலுக்குத் தனது X சமூகவலைதளப் பக்கத்தில் கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார் சூழலியல் செயற்பாட்டாளர் 'பூவுலகின் நண்பர்கள்' சுந்தர்ராஜன்.

அவருடைய பதிவில், “கோவையின் வெப்பத்தை 1.5-2 டிகிரி அதிகரித்ததுதான் திராவிட கட்சிகளின் சேவை' என்கிறார் அண்ணாமலை. என்னுடைய கேள்வி, ஒரு கட்சியால் ஒரு நகரத்தின் வெப்பத்தை 2 டிகிரி அதிகரிக்க முடியுமா? இந்த அடிப்படை அறிவு கூட இல்லையா உங்களுக்கு? உங்களுக்குக் கொஞ்சமாவது அறிவியல் அறிவு இருந்தால், @IPCC_CH-யின் அறிக்கையைப் படித்துப் பாருங்கள். உலக சராசரி வெப்பநிலை 1.45 டிகிரி அதிகரித்துவிட்டதாக ஐ.பி.சி.சி அறிவித்துவிட்டது. அதுசரி, உங்களுக்கு எப்படித் தெரியும்? உங்கள் தலைவர்தான், “WE HAVE ONLY CHANGED, CLIMATE HAS NOT CHANGED” என்று சொன்னவராச்சே. உங்களுக்கு எப்படி காலநிலை மாற்றம் பற்றியெல்லாம் தெரியும்? 'ஆத்மநிர்பர் பாரத்' என்கிற பெயரில், மத்திய இந்தியாவில் உள்ள 1.75 லட்சம் ஹெக்டேர் காடுகளைப் பெருநிறுவனங்களுக்குத் தாரைவார்த்தவர்களுக்கு வெப்ப உயர்வைப் பற்றியெல்லாம் கவலை எதற்கு?” எனக் கேட்டுள்ளார்.

பா.ஜ.க.வினர் எந்தக் காலத்தில் அறிவியல்பூர்வமாகப் பேசியிருக்கின்றனர்? அண்ணாமலையின் உளறலையும் மக்கள் நகைத்துப் புறந்தள்ளுகின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்


பா.தமிழ்மகன்




### சங்கத்தலைவர் சித்த மருத்துவர்!

சென்னை மின்வாரியச் செயலகச் சங்கத்தின் தலைவராக இருந்தார் என்னுடைய தந்தை க.பாலகிருஷ்ணன். 1972-ஆம் ஆண்டு செயலகச் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழாவை அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞரை வைத்து நடத்தினார். இந்த விழாவில், 'ஐயன்மீர் இச்சங்கம் சுண்டைக்காய் போன்றதுதான். என்றாலும், சுண்டைக்காய், வாதமொடு, மூலம், பித்தம், வயிற்றெரிச்சல், சீதம் இவை போக்கும் சிறந்த மருந்து என்பர். மோரிட்டு வறுத்து எடுத்தால் ஒரு பிடி சோறு தின்பான், ஒரு படி தின்பான். சங்கம் சிறிதெனினும் இதில் அங்கம் வகிக்கும் கலைஞர் அவர்கள் தமிழர்பால் அன்புகொண்ட மகத்தான தலைவர்' என்று வரவேற்புரை நிகழ்த்தினார். பின்பு கலைஞர் பேசும்போது 'செயலக சங்கத் தலைவர் அவர்கள் சிறந்த சித்த மருத்துவராகவும் இருக்கிறாரே' என்றபோது அரங்கமே சிரிப்பால் மகிழ்ந்தது.

**-பா.தமிழ்மகன், எழுத்தாளர், சென்னை**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியாருக்கு இந்திராவின் விருது!

1972-ஆம் ஆண்டு இந்தியாவின் 25-வது சுதந்திர நாளையொட்டி தந்தை பெரியாருக்கு விருது ஒன்றை வழங்கினார் இந்திராகாந்தி. தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சரான கலைஞர் மற்றும் நாவலர், மன்னை நாராயணசாமி, இராசாராம் உள்ளிட்டோர் பெரியார் திடலுக்கு நேரில் சென்று, ரோஜா மாலை அணிவித்து, விருதினை வழங்கினர். தாம்பாளத்தில் பழங்களுடன் பட்டயத்தையும் வைத்து, அளிக்கப்பட்ட அந்த விருதை பெரியாரும் மகிழ்வோடு பெற்றுக்கொண்டார்.

## எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **4**

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!

# திராவிடர்களுக்கு இடஒதுக்கீடு!

*1880-ஆம் ஆண்டுகளில் பம்பாய் மாகாணத்தில் தோற்றுவிக்கப்பட்ட 'சர்வஜன சங்கம்', சென்னை மாகாணத்தில் தொடங்கப்பட்ட 'மகாஜன சபை' முதலியவை இந்தியருக்கு அரசியல் உரிமை வேண்டும் என்பதை முதன்மையாக வைத்துச் செயல்பட்டன. 'இந்திய அரசுத்துறையை இந்தியர்மயமாக்கு' என்பது இவ்வமைப்புகளின் கோரிக்கை. இதையே முக்கிய கோரிக்கையாகக் கொண்டு இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம் 1885-இல் தொடங்கப்பட்டது. இந்திய நிர்வாகத் துறை, காவல்துறை, நீதித்துறை, கல்வித்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் ஆங்கிலேயர்கள் நிரம்பி இருப்பதைக் கண்டித்து காங்கிரஸ் மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*அரசுத்துறையை இந்தியர்மயமாக்கு, இந்தியர்களுக்குக் கூடுதல் உரிமை வேண்டும் என்ற பலவிதமான கோரிக்கைகள் எழும்பினாலும், ஒட்டுமொத்த இந்தியா முழுமையும் ஒற்றைக் கோரிக்கை என்ற நிலை இல்லை. ஏனெனில், இந்தியா பல்வேறு தரப்பினரை உள்ளடக்கியதாக இருந்தது. ஒவ்வொரு தரப்பின் நிலைமையும் வேறுபட்டது. பார்ப்பனரல்லாத மக்களின் நிலை, அதிலும் குறிப்பாக ஆதிதிராவிட மக்களின் நிலை மிகமோசமாக இருந்தது.*

**அயோத்திதாசர், மக்கள் தொகையில் பெரும்பகுதியினரான சாதிபேதமற்ற திராவிடர்களுக்கு அரசுப் பதவிகளில் இடஒதுக்கீடு வேண்டும் என்று வலியுறுத்தினார்.**

**அயோத்திதாச பண்டிதர்**



*கல்வி அறிவு பெற்ற ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்ற நிலையே நிலவியது. ஆதிதிராவிட மக்களின் இழிநிலையை மாற்ற நினைத்த அயோத்திதாச பண்டிதர் 1890-இல் சாதிபேதமற்ற 'திராவிட மகாஜன சபை'யைத் தொடங்கினார். 1891-ஆம் ஆண்டு பிப்ரவரி 1 அன்று, நீலகிரியில் கூடிய திராவிட மகாஜன சபையின் முதல் மாநாட்டில் ஆதிதிராவிட மக்களுக்கு அரசு வேலைகளில் இடஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட மிக முக்கியமான கோரிக்கைகள் எழுப்பப்பட்டன.*

*1908-இல் அயோத்திதாசர் தலைமையில் கூடிய திராவிட மகாஜன சபை, அரசுப் பணிகளில் ஆதிதிராவிட மக்களை நியமிக்க வேண்டும் என்று அன்றைய மெட்ராஸ் மாகாண கவர்னரை வலியுறுத்தியது. 1909-இல் மிண்டோ-மார்லி அளித்த பரிந்துரைகளின்படி இந்திய மாகாணச் சட்டமன்றங்களுக்கு, இந்திய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறை இந்திய அரசுச் சட்டத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்த திட்டமிட்டபோது, சட்டசபைகளிலும் அரசு அலுவலகங்களிலும் உள்ள இடங்களை சாதிபேதமில்லா திராவிடர்கள், சாதிபேதமுள்ள இந்துக்கள் எனத் தனித்தனியாகப் பிரித்துத் தரவேண்டும் என்று மார்லி குழுவிடம் அயோத்திதாசர் வலியுறுத்தினார். ஏனெனில், இந்துக்கள் என்ற பெயரில் உயர்சாதியினரே அனைத்து இடங்களையும் கைப்பற்றிவிடுவார்கள் என்ற முன்னுணர்வு அவருக்கு இருந்தது.*

*சுதேசி என்ற பெயரில் முன்வைக்கப்படும் உயர்சாதியினரின் நலனைக் கண்டு ஆதி திராவிட மக்கள் ஏமாறக் கூடாது என்பதில், அயோத்திதாசர் எச்சரிக்கையோடு இருந்தார்.*

*இந்து என்ற ஒற்றை அடையாளத்தை அவர் மறுத்தார். அந்த அடையாளம் பிராமணர்களுக்குச் சாதகமாய் இருக்கும் எனப் புரிந்துகொண்டார். ஆகையால், “சாதிபேதமுள்ள இந்துக்களென்னும் பிராமண மதஸ்தர்களுக்கும், சாதி பேதமற்ற திராவிடர்களாம் பவுத்த மதஸ்தர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது” என்றார் அவர்.*

*உயர் அதிகாரப் பதவியில் அமரும் பிராமணரால் சாதி நிலைப்பதோடு மட்டுமின்றி, பிராமணர்களின் ஆதிக்கம் தொடரும் என்று கருதிய அயோத்திதாசர், மக்கள் தொகையில் பெரும்பகுதியினரான சாதிபேதமற்ற திராவிடர்களுக்கு அரசுப் பதவிகளில் இடஒதுக்கீடு வேண்டும் என்று வலியுறுத்தினார்.*

*1914-இல் இவ்வுலகை விட்டு அயோத்திதாசர் மறையும் வரை, தான் கொண்டிருந்த சமூக நீதிக்கான உரிமை வேட்கையைக் கைவிடவில்லை. பல்வேறு வடிவங்களில் பல்வேறு சபைகளில் இடஒதுக்கீடு, பிரதிநிதித்துவம், ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை ஆகியவற்றிற்காக தொடர்ந்து குரல் எழுப்பிக்கொண்டே இருந்தார்.*

**...குரல் ஒலிக்கும்**

## மாநாடு

ர.பிரகாசு **4**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

# முத்தாய்ப்பான ‘முதல் மாநாடு!’




***“வாழ்வு மூன்று எழுத்து
வாழ்விற்குத் தேவையான பண்பு
மூன்று எழுத்து;
பண்பிலே பிறக்கும் அன்பு மூன்று எழுத்து;
அன்பிலே சுரக்கும் காதல் மூன்று எழுத்து;
காதல் விளைவிக்கும் வீரம் மூன்று எழுத்து;
வீரர் செல்லும் களம் மூன்று எழுத்து;
களத்திலே பெறும் வெற்றி மூன்று எழுத்து;
அந்த வெற்றிப் பாதைக்கு நம்மை அழைத்துச் செல்லும் ‘அண்ணா’ மூன்று எழுத்து”***

*முத்தமிழறிஞர் கலைஞரின் இந்தப் புகழ்பெற்ற உரை, தி.மு.க.வின் முதல் மாநில மாநாட்டுக்கு அண்ணாவைத் தலைமையேற்க, கலைஞர் வழிமொழிந்து ஆற்றியது.*

*1952-ஆம் ஆண்டு ஜனவரியில் பொதுத்தேர்தல் நடைபெறவிருந்த நிலையில், அதற்கு முன்பாக 1951-ஆம் ஆண்டு டிசம்பர் 13,14,15,16 ஆகிய 4 நாட்கள் சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானத்தில், **தி.மு.க.-வின் முதல் மாநில மாநாடு** நடைபெற்றது. தி.மு.கழகம் உருவானதற்கும், முதல் மாநில மாநாட்டுக்கும் இடைப்பட்ட காலம் 17 மாதங்கள். இடைப்பட்ட காலத்தில் 12 மாவட்ட மாநாடுகளை தி.மு.க. நடத்தியிருந்தது.*

*மிக நேர்த்தியாக மாநாடுகளை வடிவமைக்கும் பாங்கு, தி.மு.கழகத்துக்கு முதல் மாநாட்டிலேயே உருவாகிவிட்டது. தொண்டர் படை, தீர்மானக் குழு, பந்தல் குழு, ஓவியக் கண்காட்சிக் குழு, கலைக்குழு, மாநாட்டுப் பொருளாளர், மாநாட்டின் செயலாளர் என ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஆட்களை நியமித்தார் அண்ணா.*

*முதல் மாநாடே வரலாற்றில் நிலைத்து நின்றதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று 'ஓவியக் கண்காட்சி'. தமிழ்நாட்டின் வளம் அனைத்தையும் விவரிக்கும் வகையில், அந்தக் கண்காட்சி அமைந்திருந்தது. முதல் நிகழ்ச்சியாக டிசம்பர் 13- ஆம் தேதி தி.மு.க. தலைமையகமான அறிவகத்தில் இருந்து மாநாட்டுப் பந்தல் வரை மிகுந்த எழுச்சியோடு ஊர்வலம் நடைபெற்றது.*

*லட்சம் பேர் பங்கேற்ற மாநாட்டின் முதல் நாளிலேயே 2 நாடகங்கள் நடந்தேறின. அதில் முற்றிலும் இயக்கப் பெண்கள் மட்டுமே நடித்த 'போராட்டம்' நாடகமும் ஒன்று. இரண்டாவது நாளில் கலைஞர் நடித்த 'இளைஞன் குரல்', மூன்றாவது நாளில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி நடித்த 'ஜமீன் மாளிகை', நான்காவது நாளில் அண்ணாவின் 'சந்திரோதயம்' நாடகங்கள் அரங்கேறின.*

*மாநாட்டில் பொதுவுடைமைத் தலைவர் ஜீவாவும் பங்கேற்றிருந்தார்.*

*“நான் என் கொள்கையை விட மாட்டேன். பெரியாரும், ஜீவாவும் கொள்கையை விட மாட்டார்கள். மூவரும் சந்திக்கும் முகாம் ஏற்படத்தான் போகிறது. அது பொதுவுடைமை முகாமாக இருக்கட்டும். 'சமதர்ம முகாம்' என்று பெயர் பெறட்டும். அத்துடன் 'திராவிட' அடைமொழியும் சேரட்டும்' என்று உணர்ச்சிப் பூர்வமாக உரையாற்றினார் அண்ணா.*

**தேர்தல் அரசியலுக்குள் பங்கெடுப்பதற்கு முன்பே, தி.மு.க.-வின் பலம் என்ன என்பதை நாட்டு மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் உணர்த்திய மாநாடு அது.**


*அப்போது தேர்தலில் போட்டியிடாத இயக்கமாக இருந்த தி.மு.க. சில நிபந்தனைகளை விதித்து, 45 வேட்பாளர்களை ஆதரித்தது. அவர்களில் 43 பேர் வெற்றிபெற்றனர். அதேபோல தி.மு.க.-வின் ஆதரவு பெற்ற 8 பேர் நாடாளுமன்றத்தில் கால் வைத்தனர். தேர்தல் அரசியலுக்குள் பங்கெடுப்பதற்கு முன்பே, தி.மு.க.-வின் பலம் என்ன என்பதை நாட்டு மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் உணர்த்திய மாநாடு அது.*

**...கூட்டம் திரளும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

430

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131